நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு வாலிபர் பிரிவு

Vol 15 - Transmit - 02 February 2022

# கேர்ஸ்

A monthly Prayer Bulletin for Youth & Teens

FMPB YOUTH WING

for young friends of fmpb



அடிப்படை மூல சத்தியம்
தேவன் & தேவதூதன்
2

## அன்பின் தேவன்

## ONE? GOD?

Private circulation only



# Tips to propose

How to find a good love partner

# காதலைத் தெரிவிக்க டிப்ஸ்...

## Step-1 - Avoid love failure

என்னடா எடுத்ததும் காதல் தோல்வி பற்றி பேசிறனேன்னு பார்க்கிறீங்களா... ஆம், இந்த உலகத்திலே காதல் தோல்விக்கு 99% சாத்தியம் இருக்குங்க, ஆனால் இதனுடைய உண்மையான இரகசியம் என்ன அப்படின்னா? அன்பு ஒருநாளும் தோற்றுப்போகாது. ஏனென்றால் அன்பு, பாசம், இரக்கம் எல்லாவற்றையும் இந்த உலகத்துக்கு சொல்லிக் கொடுத்தது இயேசு கிறிஸ்து தாங்க, அவர் சொல்லிக் கொடுத்த எதுவுமே தப்பு ஆகாது. உதாரணத்திற்கு, நீங்க கணிதப் பாடத்தில் 30 மார்க் எடுத்து பெயில் ஆயிட்டீங்கன்னா, என்ன சொல்லுவீங்க... கணக்கில போயிட்டு, கணக்கில அவுட்டுன்னு சொல்லுவீங்க, ஆனால் உண்மை என்னன்னா... கணிதம் தோல்வி ஆகாது, எழுதின நீங்க தான் தோல்வி அடைந்தீர்கள். எனவே காதல் ஒரு போதும் தோல்வியடையாது. ஆனால் காதல் செய்பவரே தோல்வியடைபவர். இது எப்ப உங்களுக்குப் புரியுதோ அப்பவே நீங்க லவ் பண்ணுகிறதற்கு ரெடி ஆயிட்டீங்க...

## Step 2 - Select best Partner

ஒருவேளை காதலில் நீங்க 100% சரியாக இருந்தாலும், உங்க லவ் பார்ட்னர் சரியில்லன்னா அப்ப கூட உங்க லவ் தோல்வியாகிறதற்கு நிறைய வாய்ப்பு இருக்கு. அதனால் பெஸ்டான பார்ட்னரை செலக்ட் பண்ற option உங்க கையில் தான் இருக்கு. இதுக்கு 3 டிப்ஸ் தர்றேன்.

### Tips (i) Ready to accept you

நீங்க என்ன நிலைமையில் இருந்தாலும் அப்படியே உங்களை accept பண்ணுற மனப்பக்குவம் இருக்கிறவங்களா கண்டிப்பாக இருக்கணும்.

### Tips (ii) Support you always

நீங்க எந்த ஒரு முடிவு லைப்ல எடுத்தாலும் உங்க முடிவு சரியா இருக்கிற பட்சத்தில், அவங்க உங்களுக்கு support பண்ணனும். ஒருவேளை இந்த உலகமே உங்களை எதிர்த்து நின்றாலும் அவங்க உங்களுக்கு support பண்ணுறவங்களா இருக்கனும்.

### Tips (iii) Never give up

எந்த ஒரு இடத்திலேயும் உங்களை அவங்க விட்டே கொடுக்காதவங்களா இருக்கணும், ஒருவேளை உங்க லைப்ல நீங்க தப்பே பண்ணினாலும் உங்க தப்பை மன்னித்து திரும்ப ஏற்றுக் கொள்ளுகிறவங்களா இருக்கணும்.

## Step 3 - How to impress your partner

### Tips 1 - Spend Time

பணம், பொருள், அந்தஸ்து, பதவிகள் இது எல்லாவற்றையும்விட விலை மதிக்க முடியாத ஒரே ஒரு விஷயம் உங்க நேரம். இந்த நேரத்தை எவ்வளவு அதிகமா உங்க லவ்க்காக இன்வெஸ்ட் பண்ணுகிறீங்களோ அந்த அளவு உங்கள் love strong ஆகும்.

### Tips 2- Give Priority

யாராய் இருந்தாலும் எந்த ஒரு விஷயத்துக்கும் தனக்கென்று ஒரு importance கொடுக்கணும் அப்படின்னு எதிர்பார்க்கிறது தான் இந்த உலகத்திலிருக்கிற எல்லா மனுஷனுடைய இயல்புங்க. அதே மாதிரி லவ்ல கண்டிப்பாக வெற்றியடைய உங்களுடை பார்ட்னருக்கு எப்பொழுதும் முக்கியத்துவம் அதாவது முதலிடம் கொடுத்தும் impress பண்ணலாம்.

### Tips 3 - Be faithful

எந்த ஒரு சூழ்நிலை வந்தாலும் நீங்கள் தப்பே பண்ற நிலை வந்தாலும் தப்பு பண்ண மாட்டேன், என்னுடைய லவ்க்காக நான் உண்மையாய் நிற்பேன் என ஒரு தைரியமான முடிவை எடுத்து, அவங்களுக்கு முன்பு வாழ்ந்து காட்டினா,கண்டிப்பா நீங்க உங்க love partnerஐ impress பண்ணலாங்க.

இந்த விஷயங்கள் எல்லாமே பண்ணினீங்கன்னா 100% உங்கள் love success ஆகிறதற்கு நிறைய possibilities இருக்கு. என்ன ஒரே exitementஆ!

எப்ப loverஐ பார்க்கப் போறேன், பேசப் போறேன், எப்படி propose பண்ணப் போறேன்னு நினைக்கிறீங்களா?

உங்க பள்ளியிலேயோ, கல்லூரியிலேயோ, வேலை செய்யும் இடங்களிலோ, இல்ல பேஸ் புக்கிலேயோ தேடி நேரத்தை தயவு செய்து வீணாக்காதீர்கள். இந்த எல்லா qualitiesயும் இருக்கிற ஒரே ஒரு love எப்பவுமே உங்க பக்கத்திலயே உங்க கூட இருந்துகிட்டு இருக்கு, அந்த love தான் Jesus Christ. ஆம், நீங்க நினைக்கிற மாதிரி எந்த ஒரு உடைஞ்சு போன நிலைமையில் நீங்க இருந்தாலும் உங்களை love பண்ணுகிறதற்கு அவரால் மட்டும் தாங்க முடியும். நீங்க எந்த ஒரு பாவமான சேற்றில் விழுந்து புரண்டாலும் உங்களை விட்டுக் கொடுக்காமல் திரும்ப சேர்த்து அனைத்து கொள்ளுகிறவர் அவர் ஒருத்தர் தான்.

அதே மாதிரி அவர் உங்களிடம் expect பண்றது ....நீங்க அவர் கூட spend பண்ற நேரமும், உங்க லைப்ல அவருக்குக் கொடுக்கிற priority மட்டும் தாங்க.... இந்த இரண்டு விஷயத்தையும் நீங்க பண்ணினா கடைசி வரை உங்க love failure ஆகாது.

ரோமர் 8:38,39ல் பவுல் சொல்கிறதுபோல உயர்வோ தாழ்வோ, மரணமோ ஜீவனோ வேறு எந்த நிலையிலும் உம்மை விட்டு விலக மாட்டேன் என்று Heavenly Godக்கு இந்த Valentine day la propose பண்ணுவோமா?

-Allwyn

## கேரீத்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும்
வாலிபர் மற்றும் இளம் வாலிபர்களுக்கான
மாத இதழ்

## தரிசனம்

இந்தியாவின் எதிர்கால தூண்களாகிய
இளைஞர்கள் உள்ளத்தில் பரம மன்னாவை
விதைத்திடவும், சிந்தனைக் கூர் கொண்டு
இந்தியாவை மீட்டிட துடிக்கும்
இளைஞர்களுக்கான ஓர் இறை படைப்பு.

## நோக்கம்

வாலிபர் – இளம் வாலிபர்
ஜெபக்குழுக்களை வலுப்படுத்தும் மாத இதழ்

### தயாரிப்பு & வடிவமைப்பு

வாலிபர் மற்றும் இளம் வாலிபர் பிரிவு

FMPB YOUTH & TEENS WING
HEAD QUARTERS
29,High School Road
Ambattur,Chennai-53
Ph :044-26570404 Extn.256

சந்தா மற்றும் முகவரி
மாற்றத்திற்குக் கூப்பிடுங்க
Cell : 9841973060
9841973020


### ஜெபக்குழுத் தலைவர்களுக்கு...

ஜெபக்குழுவில் நீங்கள்
தியானிப்பதற்காகவும் ஜெபிப்பதற்காகவும்
கேரீத் இதழின் செய்திகளும்
ஜெபக்குறிப்புகளும் நான்கு வாரங்களாகப்
பிரித்து கொடுத்துள்ளோம்.
இப்புத்தகத்தின் ஏனைய பகுதிகளை
உங்கள் ஜெபக்குழுவிற்கு வரும்
வாலிபர்களுக்கு படிக்கக் கொடுக்கலாம்.
ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை
மாதம் ஒருமுறை சந்திப்போம்.
பயன்படுத்துங்கள், ஜெபக்குழுவை
வலுப்படுத்துங்கள்...


தொடர் ஜெபத்திற்கு

**அறைகூவல்**
மாத இதழ் பயன்படுத்தவும்



Nellai - Youth wing
9, Rhenius Street
Palayamkottai
Tirunelveli - 627002
Cell : 9003251982

Chennai - Youth wing,
90/86 Basanthi Devi Aparts,
Kothaval Chavadi St
Saidapet, Chennai -15
Cell : 9841032224

www.fmpbyouth.org
Kerithmagazine@fmpb.org

தனிப்பிரதி ரூ.25/-
ஆண்டு சந்தா ரூ.250/-


# EDITORIAL

கிறிஸ்துவுக்குள் பிரியமான கேரீத் வாசகர்களுக்கு,
அன்பின் வாழ்த்துகள்!

இந்த 21ம் நூற்றாண்டுகளில் கிறிஸ்தவ வாலிபர்கள் மூன்று மிக முக்கியமான காரியங்களில் தொய்ந்து காணப்படுகின்றனர். 1. விசுவாசத்தில் உறுதி, 2. வாழ்வில் அர்ப்பணம், 3. வீரியமற்ற ஊழியம் இதற்கு காரணம் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவினுடையவர்களாய் வாழ மறந்த தினாலும், வேதத்தை வாசிக்க மறந்ததினாலும் கிறிஸ்தவ அடிப்படை மூல சத்தியங்களை மறந்து விட்டனர். பிறந்ததினால் கிறிஸ்தவன், பிழைப்புக்காக கிறிஸ்தவன், திருமணத்திற்காக கிறிஸ்தவன், கல்லறைக்காக கிறிஸ்தவன் என்ற சிந்தை மாறி கிறிஸ்துவுக்காக கிறிஸ்துவின் சிந்தை கொண்டு வாழ மறந்து போன காரியங்களை நியாபகப்படுத்தவே இந்த ஆண்டு 16 கிறிஸ்தவ மூல அடிப்படை சத்தியங்களை 12 மாதங்களாக பிரித்து கற்றுக்கொள்ளவிருக்கிறோம். அவை 1. பரிசுத்த வேதாகமம், 2. தேவன், 3. தேவ தூதர்கள் 4. மனிதன் வீழ்ச்சி மீட்பு, 5. பாவம், 6. மனிதனின் இரட்சிப்பு 7. ஞானஸ்நானம், 8. திருவிருந்து, 9. வாக்குதத்தம், 10. பரிசுத்த மக்கள் கூட்டம், 11. சபை, 12. ஊழியம், சுவிசேம் அறிவித்தல், 13. திவ்ய சுகம், 14. சபை எடுத்துக் கொள்ளப்படுதல், 15. அக்கினி கடல், 16. புதிய வானம், புதிய பூமி ஆகியவைகளே. இவைகளில் கடந்த மாதம் அதின் முதல் பகுதியான பரிசுத்த வேதாகமத்தை குறித்து அறிந்து கொண்டோம். இந்த இரண்டாம் மாதத்தில் மூலசத்தியங்களிலிருந்து மேலும் இரண்டு காரியங்களான தேவனையும், அவரில் காணப்படும் திரித்துவத்தையும், தேவ தூதர்களையும் குறித்து ஒரு சில காரியங்களை தியானிக்கவிருக்கிறோம்.

நாம் ஒவ்வொருவரும் அடிப்படை கிறிஸ்தவ மூல உபதேசங்களை அறிந்து கொள்வது மிக அவசியம். இந்த 12 மாதங்களும் தொடர்ந்து இந்த கேரீத் இதழை வாசிக்கும் போது அநேகர் கேட்கும் கேள்விகளில் பதில் தெரியாது திகைக்காகமல், அவைகளை அறிந்து கொண்டு அடிப்படை மூல சத்தியத்தில் வேரூன்ற அழைக்கிறோம். ஒவ்வொரு மாதமும் கிறிஸ்தவ வாழ்வில் நமக்கு ஏற்படும் கேள்விகளுக்கு பதில்களாக இந்த கேரீத் மாத இதழ் வருவதற்கு ஜெபத்துடன் ஆயத்தப்படுத்தி வருகிறோம். ஆகவே உங்கள் ஜெபங்களில் எங்களை நினைவுகூருங்கள். ஜெபத்துடன் வாசித்து கிறிஸ்தவ அடிப்படை மூல சத்தியங்களை அறிந்து, வேரூன்றி, அதன்படி வாழ்ந்து உண்மை கிறிஸ்தவனாக உலகில் வலம் வர, உங்களை காண்போர் கிறிஸ்துவை காணும் பாக்கியத்தை பெறுவோம். இதை நீங்களும் வாசித்து உங்கள் சகநண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி வாசிக்க, ஊக்குவிக்க அன்புடன் அழைக்கிறோம்.

இயேசு கிறிஸ்துவின் பணியில்
V .செல்வின்

டைட்டானிக் கப்பல் மூழ்கும் போது அதன் அருகில் மூன்று கப்பல்கள் இருந்தது.அவைகளில் ஒரு கப்பலின் பெயர் சாம்சன். இது டைட்டானிக் கப்பலிலிருந்து ஏழு மைல் தூரத்திலிருந்தது. மேலும் அதிலிருந்தவர்கள் ஆபத்தைக் குறிக்கும்படியான வெள்ளை ஒளி வெள்ளத்தைப் பார்த்தார்கள். கப்பல் ஓட்டி இந்த ஆபத்தில் பிடிபட்டுவிடாதபடி தப்பிக்க வேண்டுமென்று திட்டம்பண்ணி சட்டத்திற்கு புறம்பான முறையில் எதிர்திசையில் கப்பலை ஓட்டிச்சென்று விட்டார். இந்த கப்பல் எதைக் குறிப்பிடுகிறது என்றால், நமது சொந்த பாவத்திலும் சுய வாழ்க்கையிலும் கவனம் செலுத்திக்கொண்டு தேவையிலிருக்கும் மக்களுக்கு உதவி செய்யாமல் நாம் மட்டும் தப்பித்தால் போதும் என்பதாக திசை திரும்பி போய் விடுபவர்களைக் குறிப்பிடுகிறது.

அடுத்த கப்பலின் பெயர் கலிபோர்னியன். இந்த கப்பல் டைட்டானிக் கப்பலிலிருந்து 14 மைல் தொலைவிலிருந்தது. இந்த கப்பலிலிருந்தவர்களோ பனிக்கட்டிகளினால் சூழப்பட்டிருந்தார்கள். கப்பலின் தலைமை மாலுமி வெளியில் எட்டிப் பார்த்தபொழுது, பனித்துளிகளினால் இருள் சூழ்ந்திருப்பதைக் கண்டார். இது கப்பலை செலுத்துவதற்கு ஏற்ற சூழல் இல்லை என்று எண்ணி விடியும்வரைக் காத்திருப்போம் என்று மீண்டும் படுக்கைக்கு தூங்கச் சென்றுவிட்டார். அதிலுள்ளவர்கள் ஒன்றுமே நடக்கவில்லை என்று நம்பி தங்களைத் திடப்படுத்திக்கொண்டார்கள். இந்தக் கப்பல் எதைக் குறிக்கிறது என்றால், இப்பொழுது நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலையிலிருப்பவர்களைக் குறிக்கிறது. இந்தச் சூழ்நிலைகள் சரியானதில்லை, எனவே சூழ்நிலைகள் சரியாகும்வரைக் காத்திருப்போம், பின்பு வெளியே செல்வோம் என்றிருப்பவர்களைக் குறிக்கிறது.



மூன்றாவது கப்பலின் பெயர் கர்பாதியா என்பதாகும். இந்த கப்பல் டைட்டானிக் கப்பலின் தெற்குப் பகுதியில் 58 மைல்களுக்கப்பால் இருந்தது. இதிலிருந்தவர்கள் துயரத்தினால் கூச்சலிடுபவர்களின் சத்தத்தை வானொலி மூலமாகக் கேட்டார்கள். கப்பலின் தலைவன் உடனே முழங்கால் படியிட்டு தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தேவனிடம் மன்றாடினார். பின்பு பனிக்கடலின் ஊடே கடந்து சென்று ஆபத்திலிருக்கும் கப்பலை நோக்கி தன் கப்பலை ஓட்டிச் சென்றார். ஆபத்திலிருந்த டைட்டானிக் கப்பலிலிருந்து 705 பேர்களை காப்பாற்றினார்கள்.



பொறுப்பு என்பதை செயல்படுத்தாமலிருப்பதற்கு காரணங்களும் தடைகளும் எப்பொழுதும் ஏராளம் இருக்கலாம். ஆனால் இந்த பொறுப்பைப் தங்கள் இருதயத்தில் வைத்திருப்பவர்கள் இந்த உலகத்தில் தேவையோடிருப்பவர்களுக்கு தம்மால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும் என்பதை நினைவில் கொண்டிருப்பார்கள்.

இந்த கடைசிக் காலத்தில் தன்னை மட்டும் காப்பாற்றிக் கொண்டு தேவையிலிருப்போரை மறந்து திசை திரும்பி செல்லும் சாம்சன் கப்பல் போன்று சுயநலமாய் வாழ்கிற வாழ்வுக்கு முடிவு கட்டுவோம். தேவையிலிருப்போருக்கு உதவி செய்யாமல் என்ன நடக்க போகிறது என்று வேடிக்கை பார்க்கும் பொறுப்பற்ற கலிபோர்னியன் கப்பல் போன்று இல்லாமல், காத்திருக்க நேரமில்லை, தேவ சமூகம் சென்று தேவன் சொல்லுவதை கேட்டு அவர்சித்தம் அறிந்து அவர் சித்தம் செய்யும் கர்பாதியா கப்பல்போன்று மற்றவர்களுக்கு தன்னால் இயன்றதை செய்ய துணிவும், பணிவும், அர்ப்பணமும் நம்மில் வேண்டும். டைட்டானிக் கப்பலில் உள்ள அனைவரையும் காப்பாற்ற முடியாவிட்டாலும் தன்னால் முயன்ற 705 பேரை காப்பாற்றினார்கள். நாம் என்ன செய்யப் போகிறோம். தெரிந்தெடுப்பு உங்கள் கையில், தேவ சமூகம் காத்திருந்து அறிந்து செயல்படுவோம்.

உண்மையில் சாம்சன் மற்றும் கலிபோர்னியன் போல இல்லாமல், கர்பாதியா கப்பல் போல நாம் ஒவ்வொருவரும் இந்த உலக வாழ்வில் இருப்போம் என்று உங்களை நான் வாழ்த்துகிறேன். தேவனால் படைக்கப்பட்ட இந்த உலகம் உண்மையுடனும் அன்புடனும் வாழ்வதற்கு ஏற்ற உலகமாகும். சிந்தித்து செயல்படுகிறவர்களாக மாறுவோம். வாழுவோம்.

- Mercy Selwyn



# கர்பாதியா காப்பாத்துயா!

நன்மைக்கு தீமை செய்வது பிசாசின் குணம்; நன்மைக்கு நன்மை செய்வது மனித இயல்பு; ஆனால் தீமைக்கு நன்மை செய்வதோ தெய்வீக அன்பு. தேவனுடைய அன்பைக் குறித்து நாம் சிந்திக்கும்பொழுது, தேவன் நம்மை தமது சாயலிலே படைத்தார் என்று வேத புத்தகத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற சிருஷ்டிகளைப் பார்க்கும் போது தேவன் நம்மை விசேஷித்தவர்களாகவே படைத்துள்ளார். தேவன் நமக்கு சுயாதீனத்தையும் கொடுத்தார். ஆனால் அந்த சுயாதீனத்தை மனிதன் தவறாகப் பயன்படுத்தி, இது என் சரீரம் என் இஷ்டப்படி வாழ எனக்கு உரிமை உண்டு என்றும், இது என் சரீரம் என் இஷ்டப்படி பயன்படுத்த எனக்கு உரிமை உண்டு என்றும் சொல்லி சரீரத்தை பாவங்களினாலே கறைபடுத்தினான். மனதை என் மனது, என் இஷ்டப்படி சிந்திப்பேன் என்று அசுத்த மான, அருவருப்பான சிந்தனைகளுக்கும், தவறான சிந்தனைகளுக்கும் இடம் கொடுத்தான். என் சமுதாயம், என் இஷ்டப்படி வாழ்வேன் என்றான்.. இவ்வாறு மனிதனுடைய வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இப்படி பாதிக்கப்பட்ட மனிதனைத் தேடி வந்து இறைவன் இந்த உலகத்திற்கு தமது அன்பை வெளிப்படுத்தினார். எப்படியெல்லாம் தேவன் தனது அன்பை வெளிப்படுத்தினார்? வேத புத்தகத்திலே தேவனுடைய மனிதர்களான ஆபிரகாம், ஈசாக்கு, மோசே, யோசுவா போன்ற பெரிய மனிதர்களைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் மூலமாய் தமது அன்பை தேவன் வெளிப்படுத்தினார். மனிதர்கள் அதற்கு இணங்காதபோது ராஜாக்களின் மூலமாக தமது அன்பை வெளிப்படுத்தினார். அவர்களின் ஆட்சியின் மூலமாக, அவர்களுடைய நீதியின் மூலமாக அன்பை வெளிப்படுத்த பிரயாசப்பட்டார்கள்.

தேவ அன்பிற்கு மனிதன் இணங்கவில்லை. அதன்பிறகு நியாயத்தின் மூலமாக நியாயத்தீர்ப்புகளின் மூலமாக தேவன் தமது நீதியை வெளிப்படுத்தினார். ஆனால் மனிதன் இணங்கவில்லை. அதன்பிறகு தீர்க்கதரிசிகளை அவர் அனுப்பினார், பல தீர்க்கதரிசிகளை தேவன் அனுப்பி தமது அன்பை வெளிப்படுத்தினார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக நமது கரத்திலே இருக்கிற வேதாகமம் சொல்லுகிற ஒரேயொரு சத்தியம் தேவன் நம்மேல் அன்புள்ளவராயிருக்கிறார் என்பதாகும். அவர் தமது அன்பை பலவிதங்களிலே வெளிப்படுத்தி வந்திருக்கிறார். இதற்கெல்லாம் மனிதன் இணங்காமல் இருக்கும்பொழுது இயேசு கிறிஸ்துவே இந்த உலகத்திற்கு வந்து தமது அன்பை வெளிப்படுத்தினார். தமது போதனைகளின் மூலம் அன்பை வெளிப்படுத்தினார். உதாரணமாக மத்.5,6,7 அதிகாரங்களில் மலை பிரசங்கங்களின் மூலம் வெளிப்படுத்தினார். இந்த வசனங்களைப் படித்து மகாத்மா காந்தி போன்ற பெரும் தலைவர்கள் அகிம்சை என்கிற கொள்கையை அவர்கள் வாழ்க்கையின் அடிப்படை கொள்கையாக மாற்றிக் கொண்டார்கள். ஏனென்றால் அவைகளில் இயேசு கிறிஸ்து தமது அன்பை வெளிப்படுத்தினார். போதகத்தின் மூலமாக தமது அன்பை வெளிப்படுத்தினார்.

போதனைகளைக் கொடுத்து விட்டு அவர் மறைந்து போகவில்லை. மலையிலிருந்து கீழே வந்தபொழுது குஷ்டரோகியை தொடுகிறதைப் பார்க்கிறோம். குஷ்டரோகியைத் தொட்டு, எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு என்றார். வியாதியுள்ளவர்கள் அவரிடத்தில் வருகிறார்கள், அவர்களைப் பார்க்கும்பொழுது மனதுருகி அவர்களுக்கு சுகத்தைக் கொடுக்கிறார். வியாதியிலும், பலவிதமான கஷ்டங்களிலும் வேதனைகளை அனுபவிக்கிறவர்கள் மத்தியிலே தமது அன்பை வெளிப்படுத்தும்படியாய் இயேசு கிறிஸ்து கிரியை செய்கிறவராய் சாதனைகளை அவர் செய்கிறார்.

ஆனால் அதோடுகூட அவர் மறைந்து போகவில்லை. போதனைகளை கொடுத்துவிட்டு, பல சாதனைகளை செய்துவிட்டு அவர் வாழ்க்கையின் இறுதியிலே சிலுவைக்குச் சென்றார். அவரை பகைத்தவர்கள் அவரை குத்தினார்கள், கண்களை கட்டினார்கள், பரிகாசம் செய்தார்கள், காறித் துப்பினார்கள், இவ்விதமான வேதனைகளை இயேசு கிறிஸ்து அனுபவித்தார். சிலுவையிலே அறைந்தார்கள், சிலுவைக்கு செல்லும்முன் கெத்செமெனேயில் ஜெபிக்கும்போது அவருடைய வேர்வை இரத்தமாக வெளியே வந்ததை வேதத்திலே வாசிக்கிறோம். இவ்வாறு அவருடைய வேதனையின் மூலமாக தமது அன்பை வெளிப்படுத்தினர். இயேசு கிறிஸ்து சிலுவையிலே மரித்தபொழுது தமது அன்பை நமக்கு வெளிப்படுத்தினார். சிலுவையிலே தேவக்குமாரனாகிய இயேசு கிறிஸ்து தமது உயிரைக் கொடுத்ததே தேவன் தமது அன்பை வெளிப்படுத்தின உச்சக்கட்டமாகும்.

- KTM

# தேவ அன்பு



# பிதாவாகிய தேவன்

இரண்டாம் மாதம் முதல் வார செய்தியில் மூல உபதேசத்தை குறித்த இரண்டு பகுதிகளை நாம் கற்றுக் கொள்ள இருக்கிறோம். ஒன்று திரித்துவம், இரண்டாவது தூதர்கள். முதல் மூன்று வாரமும் திரித்துவம் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியாகிய தேவன், இதை குறித்து நாம் வேதத்தின் அடிப்படையில் கற்றுக் கொள்ள இருக்கிறோம். கடைசி வாரம் தூதர்களை குறித்து வேதம் என்ன சொல்கிறது என்பதை நாம் கற்றுக் கொள்வோம். ஏன் இந்த மூல உபதேசங்கள் என்றால் மூல உபதேசங்களில் நாம் அடி ஆழத்திலே நாம் திடமான அஸ்தி பாரத்தோடு இருக்க வேண்டும். ஏனென்றால் கொள்கை குழப்பங்கள் மிகுந்த இந்த நாட்களில் நீங்கள் தவறிவிட வழி ஏதுவாக இருக்கும். எனவே மூல உபதேசங்களை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். இவைகளை குறித்து அதிகம் கேள்வி கேட்கிறது அல்லது சந்தேகிக்கவோ கூடாது. அதை வேதத்தின் அடிப்படையிலே, வசன ஆதாரத்தின் அடிப்படையிலே நாம் அதில் வேரூன்றக்கடவோம். இந்த முதலாம் வாரத்திலும் திரித்துவத்தை குறித்த காரியங்களை நாம் கற்றுக்கொள்ள இருக்கிறோம். ஆவியானவர் தாமே நமக்கு உதவி செய்வாராக.

கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரையில் இரண்டு அசைக்க முடியாத அடிப்படை தத்துவங்கள் உண்டு. அவை என்னவென்றால் ஒன்று திரித்துவம், மற்றொன்று கிறிஸ்து இயேசுவின் உயிர்த்தெழுதல். இந்த இரண்டு கோட்பாடுகளையும் இல்லை என்று நிரூபித்துவிட்டால் கிறிஸ்துவத்தை வேரோடு சாய்த்து விடலாம் என்ற நம்பிக்கை பல ஆயிரம் ஆண்டுகளாக பல பேரரசர்களுக்குள்ளும், அறிஞர்களுக்குள்ளும், மதத்தலைவர்களுக்குள்ளும் இருந்தது என்பதை சொன்னால் மிகையாகாது. இதற்காக அவர்கள் செலவிட்ட தொகை மற்ற கண்டுபிடிப்புகளுக்கு செலவிட்ட தொகையை விட அதிகம் என்று ஒரு ஆய்வு குறிப்பு சொல்லுகிறது. இதற்காக அவர்கள் நான்கு பல்வேறுபட்ட தலைப்புகளின் கீழ் பலநூறு புத்தகங்களை எழுதினாலும் அதை இல்லை என்று முயற்சிக்க பாடுபட்டனர். அவைகளில் ஒன்று தத்துவம் அடிப்படையின் (Philosothical) அது இல்லை என்று நிரூபித்துக் காட்ட முயற்சித்தனர். இரண்டாவதாக பிரபஞ்சத்தின் அடிப்படையில் (Cosmological) அது இல்லை என்று நிரூபிக்க அதிகமாக பிரயாசப்பட்டனர். மூன்றாவதாக உயிரியலின் அடிப்படையில் (Ontological) திரித்துவத்தை குறித்த அனேக கோட்பாடுகளை விளக்கி அது இல்லை என்ற ஒரு சந்தேகத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக கடைசியாக மானுடவியல் (Anthrotological) இதன் அடிப்படையிலேயே திரித்துவத்தை குறித்த அனேக காரியங்களை எழுதி அவைகளை இல்லை என்ற ஒரு சந்தேகத்தை உண்டாக்க முயற்சித்தனர். குறிப்பாக இந்த Anthrotological (மானுடவியல்) சார்ந்த அநேக புத்தகங்கள் வேத வசனங்களை அடிப்படையாகக் கொண்டு கூட எழுதப்பட்டது. ஆனால் நாம் இன்றைய நாளிலே ஒரு சில வசனங்களை மட்டுமே படித்து வசனத்தின் அடிப்படையில் மட்டுமே, கற்றுக்கொள்ளவேண்டும். தெய்வத்தை வேதத்திலிருந்துதான் நாம் கற்றுக் கொள்ள வேண்டுமே ஒழிய, பிற புத்தகங்களில் இருந்து நாம் கற்றுக்கொள்ள இயலாது என்பதை முதலாவதாக மனதிலே வைத்துக்கொள்ளுங்கள். வேதத்திற்கு விளக்கம் வேதத்திலேயே வேறு எங்கேயாவது இருக்கும் அதைதான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது வேதத்தின் அடிப்படையில் கடவுளை ஒரு சில வசனங்களோடு நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

திரித்துவம் என்பது மூவரில் ஒருவரானவர், ஒருவரில் மூவரானவர் இந்த அடிப்படை சிந்தை நம் மனதிலே ஆழமாக பதிந்து இருக்க வேண்டும். இந்த செய்தியை தொடர்ந்து 3 வாரங்கள் நாம் படிப்பதற்கு முன்பதாக ஒரு வாக்கியத்தை உங்களுக்கு முன்வைக்க விரும்புகிறோம். அது என்னவென்றால் திரித்துவத்தை குறித்து விளக்க முயற்சிக்கக்கூடாது. அதை முழுமையாக விளங்கிக் கொண்டால் மட்டுமே, நான் கிறிஸ்தவ ஜீவியத்தை தொடருவேன் என்ற ஒரு நிலையும் இருக்க கூடாது. இதை விளங்கிக் கொள்வதும் கஷ்டம். விளக்குவதும் இயலாத காரியம் அப்படியென்றால் என்ன செய்ய வேண்டும். ஒன்று நிச்சயம் ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் வளரும் பொழுது, நாம் இதுகுறித்து புரிந்துகொள்ள அனேக வாய்ப்புகள் சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படும். அதிலே நாம் புரிந்துகொள்ளமுடியும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒன்றை சொல்ல வேண்டுமென்றால் ஒருமுறை கூட முழுமையாக வேதத்தை வாசிக்காமல், படிக்காமல் இதை புரிந்து கொள்ள வேண்டும் என்று முயற்சிப்பது இயலாத ஒரு காரியம். பல முறைகள் வாசித்தும் கூட இதைக் குறித்து முழுமையாக புரிந்துகொள்ள இயலாத நிலை நீடித்திருக்கும் பொழுது ஒருமுறை கூட வேதத்தை வாசிக்காமல் புரிந்து கொள்ள வேண்டும் என்று முயற்சிப்பது உங்களால் இயலாது. திரித்துவத்தை குறித்து மேலும் ஒரு காரியத்தை சொல்லுகிறோம். இதுகுறித்து சந்தேகிக்கக்கூடாது இவைகளே குறித்து பிரித்து பிரித்து நீங்கள் கேள்வி கேட்டுக் கொண்டோ அல்லது உங்களுடைய மனித வாழ்க்கையின் சுற்றுப்புற சூழ்நிலைகளை வைத்து அவைகளை அடையாளம் காட்டிக் கொண்டோ இருந்தால், நம்மால் அதை கற்றுக் கொள்ள முடியாது. இது 100% ஆவிக்குரிய நிலையில் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும். எனவே இந்த திரித்துவத்தை இந்த வாரங்களில் நாங்கள் விளக்க முயற்சிக்கவில்லை. அதற்கு மாறாக தொடர்ந்து வரும் உங்கள் தியானத்திற்கு ஆதாரமாக ஒரு சில வசனங்களோடு அதை நாங்கள் உங்களுக்கு முன்வைக்கிறோம். புரியவைக்க முயற்சிக்காமல் நீங்கள் சத்தியத்தை சத்தியமாக எடுத்துக் கொள்ளும் பொழுது அதை புரிந்து கொள்வதற்கு உங்களுக்கு வாய்ப்புகள் உண்டு. மேலும் திரித்துவத்தை குறித்த அசைக்க முடியாத நம்பிக்கையை குறுக்கு கேள்விகள் கேட்டு அல்லது உலகப்பிரகாரமான காரியங்களை எடுத்துக்காட்டுக்கு என்று சொல்லி விளங்க வைக்கவும் முடியாது. தயவுகூர்ந்து நீங்கள் ஜெபத்தோடு இதில் சொல்லப்பட்டுள்ள வசனங்களை வாசித்து ஜெப சிந்தையோடு முன்னேற உங்களை அன்புடன் அழைக்கிறோம். இப்பொழுது வேதத்தின் அடிப்படையில் ஒரு சில காரியங்களை உங்களுக்கு நாங்கள் கற்றுத் தருகிறோம்.

## வேதத்தில் தெய்வம்:

தெய்வம் ஜீவனுள்ளவர், உண்மையானவர், கண்ணுக்குப் புலப்படாதவர், காருண்யம் மிகுந்தவர், எல்லாவற்றுக்கும் மேலாக நித்தியமானவர், காலங்களால் அவரை வரையறுக்க முடியாது, ஞானத்திற்கு அப்பாற்பட்டவர், பரிசுத்தத்தின் உச்சம், ஈடு இணையற்றவர், நீடிய பொறுமையுள்ளவர், மிகுந்த அன்புள்ளவர், இரக்கமுள்ளவர், எல்லாம் வல்லவர், எல்லாவற்றையும் தனக்கு சொந்தமாக கொண்டவர் என்று வேதத்தின் பல பகுதிகளிலிருந்து வாசித்து ஒட்டுமொத்தமாக நாம் இப்படி சொன்னாலும் நான்கு தலைப்புகளின் கீழ் தெய்வத்தின் நாமத்தை நாம் கற்றுக் கொள்ள முடியும். ஒன்று ஏலோகீம். ஏலோகீம் என்ற வார்த்தை அதிக வல்லமையும், மகிமையும் கொண்டது. இது வேதத்தில் 2570 முறை சொல்லப்பட்டுள்ளது. முதல் முதலாவதாக ஆதியாகமம் 1:1 செல்லப்பட்ட என்ற வார்த்தை ஏலோகீம். ஏலோகீம் என்ற வார்த்தை பன்மையை உள்ளடக்கிய ஒருமையின் வினைச்சொல் என்று சொல்வார்கள். இதே அர்த்தத்தில்தான் சங் 19:1லும் உள்ளது. 2. அடனோய் (மல்கியா 1:6). இது எஜமான் வேலைக்காரன் இவர்களுக்கு இடையே உள்ள தொடர்பிலே சொல்லப்பட்டுள்ளது. முழு சிருஷ்டிப்புக்கும் எஜமானர் நாம் அவரின் பணியாளர்கள் அல்லது வேலைக்காரர்கள். இந்த அடோனாய் என்ற வார்த்தை எஜமானுக்கும், வேலைக்காரனுக்கும் இடையே உள்ள உறவுகளை குறிப்பதாகும். வேலைக்காரனுக்கு தேவையானவற்றை அறிந்து கொடுக்கும் எஜமானாகவும் நாம் கற்றுக்

கொள்ளலாம் (ஆதி 24: 1 -12 ; பிலி 4:19). 3. ஏல்(EL) இந்த ஏல் என்ற தெய்வத்தின் நாமம் நான்கு கோணங்களில் நாம் வரையறுக்க முடியும். முதலாவதாக ஏல்-எலியோன்(ELYON - The storngest one) இதைப் புரிந்து கொள்ள ஆதி 14: 17- 20 பகுதிகளை நாம் வாசிக்கலாம். அடுத்தபடியாக எல்ரோயி(ElROI) இது ஆதியாகமம் 16- இல் நாம் அறிந்துகொள்ள முடியும். மூன்றாவதாக எல்டாய் (EL-SHADDAI) இது பழைய ஏற்பாட்டில் மட்டும் 48 இடங்களில் சொல்லப்படுகிறது. ஆதி 17:1 நாம் இதை வாசிக்கலாம். மேலும் சங்கீதம் 91:1ல் நாம் வாசிக்கலாம். கடைசியாக ஏல்-ஓலம்(EL-OLAM) நித்திய கடவுள் ஏசா 40:28-31-ல் வாசிக்கலாம். ஏல் என்ற தன்மையோடு நான்கு கோணங்களில் நாம் வாசித்தோம். தெய்வத்தின் நாமங்களை குறித்து மிக விளக்கமாக கடந்த மாத பத்திரிகையிலே தொடர்ந்து எழுதிக் கொண்டு உள்ளோம். தயவுகூர்ந்து அதைப் படிக்க உங்களை அன்போடு கேட்டுக்கொள்ளுகிறோம். கடைசியாக யெகோவா(JEHOVAH) இது வேதம் முழுவதும் 6823 முறை உள்ளது. இதைகுறித்து ஒன்பது கோணங்களிலே நாம் கற்றுக்கொள்ளலாம். அதையும் சுருக்கமாகத் தருகிறோம். ஒன்று Jehovah Jireh (ஆதி 22: 13-14), இரண்டு Jehovah Nissi கடவுள் வெற்றிக்கொடியானவர் (யாத் 17:15), மூன்று "Jehovah Shalom" சமாதான கர்த்தர் (நியா 6:24), நான்கு "Jehovah Saboth" (யோசு 5:14), ஐந்து "Jehovah Maccaddeschcem"அவர் நம்மை பரிசுத்தப்படுத்துகிறவர் (யாத் 31: 13), ஆறு "Jehovah Rohi" கர்த்தர் என் மேய்ப்பர் (சங் 23), ஏழு "Jehovah Tsitkenu" நீதியின் தெய்வம் கர்த்தர் நீதியுள்ளவர் (எரே 28:36). ஆறாவதாக "Jehovah Shamma" கடவுள் நிறைந்திருக்கிறார். (God His Present) நம்மை இப்பொழுது வழி நடத்துகிற கடவுள்(எசே 48:35). கடைசியாக "Jehovah Rapha" அவர் நம்மை குணப்படுத்துகிறார் (யாத் 15:26). வேதத்திலே 4 பெரும் தலைப்புகளின் கீழாக பல கோணங்களிலே கடவுளுடைய நாமங்களை நாம் பெற்றுள்ளோம். இதை உங்கள் தியானங்களில் நீங்கள் வாசித்து ஜெபத்தோடு தியானிக்கும் பொழுது தேவன் உங்களுக்கு அதைக் குறித்த காரியங்களை தனிப்பட்ட உங்கள் வாழ்வில் அதை விளக்க வல்லமை உள்ளவராக இருக்கிறார். தொடர்ந்து அடுத்த பகுதிக்குள்ளாக நாம் கடந்து செல்லலாம்.

## வேதத்தில் தெய்வத்தன்மை:

இந்த தலைப்பின் கீழாக மூன்று பெரும் பகுதிளாக பிரித்து நாம் கற்றுக் கொள்ளலாம்.

### 1. கடவுள் ஆவியானவர்:

இதைக்குறித்து நாம் வேதத்தில் ஒரு வசனத்தை நாம் தெளிவோடு வாசிக்கலாம் (யோவான் 4: 24) இயேசுவானவர் சமாரிய ஸ்திரியிடம் சொன்ன வார்த்தை தேவன் ஆவியாய் இருக்கிறார். அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது சேவிக்க வேண்டும் ஆனால் இந்த ஆவியானவரை குறித்து மேலும் ஒருசில அவருடைய காரியங்களை படிக்கும் பொழுது அவருடைய வல்லமையான புயம் (யாத் 33:27), அவர் பார்க்கிறவர் (சங் 33: 18), அவர் கேட்கும் கடவுள் (2 இராஜா 19: 16), அவர் பேசுகிற கர்த்தர் (ஏசாயா 58:14) என்ற கோணங்களிலும் நாம் பார்க்க முடிகிறது. அவர் ஆவியாக இருக்கிறார். அதே நேரத்தில் மனிதனுக்குள்ள இந்த காரணிகள் அனைத்தையும் உள்ளடக்கியதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

### 2. கடவுள் ஒருவரே:

உபா 6:4-5 வசனங்களில் நாம் வாசிக்கும் பொழுது இஸ்ரவேலே கேள் உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் என்று நாம் வாசிக்கிறோம். ஒரே கர்த்தர்தான் இவைகளை நாம் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். இதை மொ ப்ரேயர் என்றும் சொல்லுவார்கள். இதை குறித்து மேலும் ஒரு சில வசனங்களை தருகிறோம். தயவுகூர்ந்து வாசித்துக் கொள்ளுங்கள். (1 இராஜா 8: 60; ஏசாயா 44: 6,8 45:5-6; எபே 4: 4 6; 1 தீமோ 2:5) இந்த வசனங்களை வாசிக்கும் பொழுது கடவுள் ஒருவரே என்ற ஒரு சத்தியத்திற்குள் நாம் வந்துவிடவேண்டும். அவர் மூன்று கடவுள் அல்ல. ஒரே கடவுள் இதை அப்படியே விசுவாசிக்க உங்களை அழைக்கிறோம்.

### 3. திரித்துவகடவுள்:

கடைசியாக மூன்றாவது பகுதி திரித்துவகடவுள் இதைக்குறித்து வேதம் சொல்லும் ஒரு சில வசனங்களை நாம் கற்றுக்கொள்ளலாம். இயேசு கிறிஸ்துவின் விளக்கத்தில் அடைப்படையிலே முதலாவதாக கற்றுக்கொள்வோம் (யோவான் 14:16) இதில் சொல்லப்பட்ட ஒரு வார்த்தை வேறொரு தேற்றரவாளன் கிரேக்க மொழியில் வேறொரு என்பதற்கு இரண்டு வார்த்தைகள் உண்டு. ஒன்று Allos இரண்டாவது Hetros இதில் Hetros என்றால் வேறொரு தன்மைகொண்ட வேறொரு பொருள் என்று அர்த்தம். ஆனால் Allos என்றால் அதே தன்மையுள்ள வேறொரு பொருள் என்று அர்த்தம். இதில் வேறொரு தேற்றரவாளன் என்ற வார்த்தைக்கு அர்த்தம் Allos என்று தெளிவாக உள்ளது. மேலும் யோவான் 14:26-ஐயும் நாம் வாசிக்கலாம்.

ஞானஸ்நானத்திலும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிற வசனங்களை நாம் பார்க்கலாம். (மத்தேயு 28: 19 -20) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்தானம் கொடுத்து அப்போஸ்தலர்களுடைய ஆசீர்வாத ஜெபத்திலேயும் இதை நாம் வாசிக்க முடியும். (2 கொரி 13:14) கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை தேவனுடைய அன்பு பரிசுத்தாவியானவருடைய ஐக்கியம் என்று உள்ளது. தொடர்ந்து திரித்துவத்தை குறித்து பழைய ஏற்பாட்டில் ஒரு சில வசனங்களை நாம் கற்றுக் கொள்ளுவோம். கடவுள் மனிதனை சிருஷ்டிக்கும் போது பயன்படுத்தப்பட்ட வார்த்தை திரித்துவதற்கு ஆணித்தரமாக உள்ளது (ஆதி 1:26). நமது ரூபத்தின் படி இது தன்மை கொண்ட ஒரு சொல். அதேபோல் ஆதி 3: 22 இல் சொல்லப்பட்டுள்ள வார்த்தையிலும் பன்மைத்தன்மை கொண்ட கடவுளாக சொல்லப்படுகிறது. தொடர்ந்து ஆதியாகமம் 11:7ல் பாபேல் கோபுரத்தை கட்டும் பொழுது, 7வது வசனம் சொல்கிறது நாம் இறங்கிப்போய் ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு என்று தொடர்வதை பார்க்கலாம். இதிலும் திரித்துவம் தெளிவாக காணப்படுகிறது. மேலும் இரண்டு எடுத்துக்காட்டுகள் பிரசங்கி 12: 1, அடுத்தபடியாக ஏசாயா 54: 5 இந்த இரண்டு வசனங்களிலும் சொல்லப்பட்டுள்ள வார்த்தை திரித்துவத்தை குறிக்கும் சொல்லாக உள்ளது. திரித்துவத்தை குறித்த முடிவுரையாக 3 குறிப்புகளோடு இந்த பகுதியை நிறைவு செய்கிறோம்.

1. பிதாவாகிய கடவுள் (யோவா 6: 44 46; ரோமர் 1: 7; 1 பேதுரு 1:2)

2. குமாரனாகிய கடவுள் (ஏசாயா 9:6 யோவான் 1:1; 20 28; 1 தீமோ 3:16; எபி 1:8)

3. பரிசுத்த ஆவியானவராகிய கடவுள் (அப் 5:3,4; எபி 9:14)

இந்த பகுதி முழுவதும் வேதமெங்கிலும் காணப்படுகிற திரித்துவத்திற்கு அடித்தளங்களாகிய வசனங்கள் இவைகளில் ஒவ்வொரு முறையும் வாசித்து ஜெபத்தோடு அவைகளை அப்படியே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவன் அதற்கு உதவி செய்வாராக. அன்பு தம்பி, தங்கையே திரித்துவ தெய்வத்தின் நாமத்தில் உங்களை ஆசீர்வதிக்கிறோம். அவர்தாமே உங்களை தலைமுறை தலைமுறைக்கும் நித்திய வழியிலே நடத்துவாராக ஆமென்.

- Selva



# தேவை துரிதம்






மன்னன் 8ம் ஹென்றி காலத்தில் அஞ்சல் காரர்களுக்கு மன்னனின் தபால்களை மிகவும் துரித மாகப் பட்டணங்களுக்கு எடுத்துச் செல்ல வசதியாக குதி ரைகள் கொடுக்கப்பட்டன. சில தபால்காரர்கள் மிகவும் மெ துவாக சென்றனர். போகும் வழியில் இருந்த சத்திரங்களில் தங்கிக்கொண்டு பொறுப்பற்றவர்களாக கால தாமதமாக கடிதங்களை எடுத்து சென்றனர். இதை தவிர்ப்பதற்காக மன்னன் ஒரு கட்டளையைப் பிறப்பித்தார். அதன்படி உனக்கு உயிர்மேல் ஆசையிருந்தால் சீக்கிரமாக கடிதத்தை ஒப்படைக்க வேண்டியவர்களிடம் ஒப்படைத்து விடு என்று தபால்காரர்களுக்குக் கூறப்பட்டது. எந்த அஞ்சல்காரராவது வேண்டுமென்றே கடிதம் கொண்டுபோகும்போது, காலதாமதம் செய்தால் அவர் பகிரங்கமாக பொது மக்கள் முன்னிலையில் தூக்கிலிடப்படுவார் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. மிக முக்கியமான அவசர கடிதம் என்றால் அந்த கடிதத்தின் மேல் உறையின் மீது ஒரு மனிதன் தூக்கிலடப்பட்டு தொங்குவதைப் போன்ற படம் வரையப்பட்டது. அதை பார்த்ததும் தபால்காரர் நிலமையை உணர்ந்து கொண்டு வேகமாக கடிதத்தை கொண்டு சேர்க்க வேண்டும். மேலும் “துரிதமாக செல், கடிதம் துரிதமாக செல்லட்டும், உன் உயிருக்காக துரிதமாக செல்” என்று அந்த கடிதத்தின் அடியிலே எழுதப்பட்டிருந்தது. அதிலும் ராஜாவின் காரியம் என்றால் துரிதமாக சென்றுவிட வேண்டும், காலதாமதம் இருக்கவே கூடாது என்பதை அஞ்சல்காரர்கள் அன்று நன்கு அறிந்து வைத்திருந்தனர்.

ஆம் பிரியமானவர்களே, நமது ராஜாவாகிய இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவரிடமும் அவசரமாக அறிவிக்க வேண்டிய இரட்சிப்பின் செய்தியை ஒப்படைத்திருக்கிறார். அதை இந்த மனுகுலத்திற்கு கொண்டுபோய் சேர்க்க வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. இந்த இரட்சிப்பின் செய்தியை பெற்றுக்கொள்ளுவதற்கு முன்பு ஒருவர் கூட மரித்து போகக்கூடாது. ஆகவே துரித மாக இரட்சிப்பின் செய்தியை எடுத்துக் கொண்டு நாம் செல்ல வேண்டும். அதை கொண்டுபோய் சேர்க்க வேண்டியவர்களிடம் சேர்க்கும் முன்பு நாம் ஓய்வெடுக்க கூடாது. கர்த்தருடைய வேலையை அசதியாய் செய்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று (எரே 48:10) தீர்க்க தரிசன புத்தகத்தில் வாசிக்கிறோம். மாற்கு 16:15-ல் “நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்” என்று இயேசு கிறிஸ்து கொடுத்த கட்டளையை குறித்து நாம் வாசிக்க முடியும்.




மன்னன் 8ம் ஹென்றி, அஞ்சல்காரர்கள் துரித மாக கடிதங்களை கொண்டு செல்ல வசதியாக குதிரைகளை கொடுத்தது போல இன்று தேவனுடைய இரட்சிப்பின் செய்தி யை சுமந்து செல்லும் நமக்கு தேவன் சகல அதிகாரத்தை கொடுத்துள்ளார். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பிசாசுகளை துரத்தவும், நவமான பாகைளை பேசவும், வியாதி யஸ்தர்கள் மேல் கைகளை வைத்து அவர்களை சொஸ்த மாக்கவும் தேவன் நமக்கு அதிகாரம் கொடுத்துள்ளார். அதை நாம் பயன்படுத்தி தேவ செய்தியை கொண்டு சென்றால் திரளான ஜனங்கள் அந்த செய்தியை பெற்றுக்கொள்வார்கள், மனந்திரும்புவார்கள்.

ஆம் பிரியமானவர்களே, இந்த கடைசி காலகட்டத்தில் வாழ்கின்ற நாம் தேவனிடம் கிருபைகளையும், வரங்களையும், பெற்றுக்கொண்டு துரிதமாய் இரட்சிப்பின் செய்தியை அறிவிப்போம், ஆசீர்வதிக்கப்படுவோம், பிறருக்கு ஆசீர்வாதம ாய் மாறுவோம்.

சங் 118:17-ல் நாம் சாகாமல் பிழைத்திருந்து கர்த்தருடைய செயல்களை விவரிப்பேன் என்று தாவீது சொன்னது போல, நாமும் கொரோனா போன்ற கொடிய நோய்களின் அச்சுறுத்தலின் பயத்தினால் மடிந்து போகும் மாந்தர்களை மீட்க நற்செய்தியை துரிதப்படுத்துவோம். கொரோனா வந்து விடுமோ என்ற பயத்தில் மனைவியையும் தனது 2 மகள்களையும் கொன்று தன்னையும் மாய்த்து கொண்ட கோர சம்பவங்கள் நம் மத்தியில் நடந்து கொண்டு இருக்கும் போது, இன்னும் அமைதியாக இருக்கலாகாது. பயப்படாதே மரணத்தை ஜெயித்தவர் உன்னோடு இருக்கிறார் என்ற நற்செய்தியை அண்டையிலுள்ளோர், நம்முடன் பயணம் செய்வோர், நம் உறவினர் அனைவருக்கும் நம்மை மீட்க ஒருவர் உண்டு என்ற அவரின் செய்தியை இன்றே கொண்டு செல்லுவோம். நமக்கு இது கடைசி நாள் என்பதை உணர்ந்து துடிப்புடனும், தயங்காமலும் ஓய்ந்திராது அவர் கொடுத்த கடைசி கட்டளையை நிறைவேற்றுவோம். மாராநாதா இயேசு சீக்கிரம் வருகிறார் ஆமென்!

- Selwyn

**கர்த்தரை பிரஸ்தாபம் பண்ணுகிறவர்களே, நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது (ஏசாயா 62:6).**



# பணத்தை கையாளுவது எப்படி ?

## வேதாகம நிதி மேலாண்மை கொள்கைகள்



சரித்திரத்தில் பல்வேறு சூழ்நிலைகளிலும் காலக்கட்டங்களிலும் நிதி மேலாண்மை குறித்தும் செல்வத்தை நிர்வகிப்பதைக் குறித்தும் பல்வேறு கருத்துகள் இருந்துள்ளது. இன்றைய உலக ஞானத்தின் படி பல்வேறு நிதி மேலாண்மை தந்திரங்கள் புள்ளி விவரங்கள், ஆய்வுகள், தொழிநுட்ப பயன்பாடுகள் இருந்தாலும் நாம் பணத்தை கையாளுவது குறித்து எந்தவித தெளிவும் முழுமையாக கிடைத்தது இல்லை. இன்றும் கூட முதலீடு குறித்தும் (Equity Premium Puzzle) லாபப்பங்குகள் கொடுப்பதைக் குறித்தும் (Dividend Puzzle) மற்றும் பல பிரச்சனைகளும் (PPP Puzzle, Exchange Rate Disconnect Puzzle etc) தீர்வு இன்றி ஒரு புரியாத புதிராகவே இருக்கிறது.

நடத்தை சார்ந்த நிதிமேலாண்மை (behavioural finance) போன்ற புதிய துறைகள் வந்தாலும் கூட பணத்தை கையாளுவது ஒரு சவாலாகவே விளங்குகிறது. உதாரணமாக ஒரு அமெரிக்க பல்கலைக்கழகத்தில் ஒரு ஆய்வு செய்யப்பட்டது. அவர்கள் மக்களிடம் இருகேள்விகளை கேட்டனர்.ஒன்று உங்களுக்கு வருடத்திற்கு டாலர் 50,000-மும் உங்கள் அண்டை வீட்டாருக்கு டாலர் 40,000-மும் சம்பாதிப்பது விருப்பமா? அல்லது நீங்கள் டாலர் 60,000-மும் உங்கள் அண்டை வீட்டார் டாலர் 70,000-மும் சம்பாதிப்பது விருப்பமா? என்பதுதான் கேள்விகள். ஆனால் பெரும்பாலான பதில்கள் எனக்கு குறைவான பணம் கிடைத்தால் கூட பரவாயில்லை. ஆனால் என் பக்கத்து வீட்டுக்காரனைவிட அதிகம் பணம் வேண்டும் என்றே வந்தது. ஆகவே எப்படி நாம் பணத்தை சிறப்பாக கையாள முடியும்? அதின் வழிமுறைகள்தான் என்ன?

நேர்த்தியான நிதி மேலாண்மைக்கான பதில் வேதத்தில்தான் உள்ளது. நம் வேதத்திற்கும், நிதி நிர்வாகத்திற்கும் என்ன சம்பந்தம் என்று நாம் எண்ணலாம். ஆனால் பின்வரும் உண்மைகள் பலரும் அறியாதது.

பைபிளில் 2500க்கும் மேற்பட்ட வசனங்கள் பணத்தையும், பண சம்பந்தமான வசனங்களாவே உள்ளன.

பரலோகம் மற்றும் நரகம் பற்றி கூறுவதைக்காட்டிலும் வேதம் பணத்தைப்பற்றி கூறுகிறது.

ஜெபத்தைப்பற்றியும் விசுவாசத்தைப் பற்றி போதிப்பதைக் காட்டிலும் 5 மடங்கு அதிகமாக நிதி

### வேதம் நிதி மேலாண்மைப்பற்றி என்ன கூறுகிறது?

இயேசு பகிர்ந்த 38 உவமைகளில் 16 உவமைகள் பணத்தையும் செல்வத்தையும் நிர்வகிப்பது பற்றிதான்.

வேதம் நிதி மேலாண்மைமைக்குறித்து என்னவெல்லாம் கூறுகிறது. நாம் எங்கு துவங்கலாம்? என்பதற்கு முதலாவது.உலகத்தில் நாம் ஒரு குடியரசில் வாழ்ந்தாலும் நாம் தேவ ராஜ்ஜியத்தை சார்ந்தவர்கள் என்பதை மறந்து போக கூடாது. நாம் அறிந்த உலக அமைப்புகளுக்கும், தேவ ராஜ்ஜியத்திற்கும் பல வித்தியாசங்கள் உண்டு. அவற்றில் சிலவற்றை கீழே காண்போம்.

உக்கிராணத்துவம் VS சொந்தக்காரத்துவம்
(Stewardship vs Ownership)

கொடுப்பது VS பெறுவது
(Giving vs Receiving)

பொதுநலம் VS சுயநலம்
(Selfless vs Selfish)

நித்தியம் VS தற்காலிகம்
(Eternal vs Temporal)

ராஜ்ஜியம் VS ஜனநாயகம்
(Kingdom vs Democracy)

ராஜ்ஜியம் என்னும் வார்த்தை ராஜாவையும், அவருடைய ஆதிக்கத்தையும் (King with Dominion) என பொருள்படும். தேவராஜ்ஜியத்தின் பிரதிநிதிகளாக இருக்கிற நீங்களும், நானும் நம் கையில் கொடுக்கப்பட்டிருக்கிற பொருட்களானாலும், நிதியானாலும் அவற்றை குறித்து தேவராஜ்ஜியத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு கொண்டு வந்த செய்தி என்னவென்றால் தேவனையும், தேவனுடைய ராஜ்ஜியத்தையும் பற்றியதாகும்.அதை அறிந்து கொள்ளாமல் தேவனின் நிதி மேலாண்மை கொள்கைகளை எளிதில் புரிந்து கொள்ள முடியாது. ஆகவே தேவனுடைய ராஜ்ஜியத்தை குறித்த காரியங்களை இந்த மாதம் கற்றுக்கொண்டு, அடுத்த மாதம் முதல் பணத்தை கையாளுவது எப்படி அல்லது தேவனின் நிதி மேலாண்மை கொள்கைகளை குறித்து கற்றுக் கொள்ள போகிறோம். இதில் நாம் மூன்று கூறுகளை காணமுடியும். முதலில் ராஜ்ஜியத்தில் ராஜா நம்மை அரசாளுகிறார். இரண்டாவதாக ஆளுகை செய்ய ஒரு கட்டமைப்பு தேவை. மூன்றாவதாக ஆளுகை செய்ய ஒரு தேசம் தேவை என்ற தலைப்புகளில் இம்மாதம் சிந்திப்போம்.

இராஜ்ஜியத்தை குறித்து நாம் கற்க வேண்டிய பாடங்கள் என்ன?

**1. தேவனே ராஜாவாக நம்மை அரசாளுவார்**
இயேசு ஒரு கனிவான மேய்ப்பனாகவும், சுகமளிக்கும் மருத்துவராகவும், சிறந்த நண்பராகவும், அருமை இரட்கராகவும் இருந்தாலும் அவர் ராஜாதி ராஜாவாகவும் சர்வ லோகங்களையும் ஆட்சி செய்கிறார். இயேசுவின் அருமை சீஷனாகிய யோவான் அவரது மார்பில் சாய்ந்தாலும் அவரை ராஜாவாக சந்தித்த போது (வெளி 1:17) மரித்தவனை போல் கீழே விழுந்தார். நாம் இயேசுவை ராஜாவாக நம் வாழ்வில் காண்கிறோமா? அவர் சகல சிருஷ்டிப்புகளையும் கெம்பீரமாய் ராஜரிகம் செய்வதை உணருகிறோமா? எந்த சந்தேகமுமில்லாமல் இயேசு தன் வார்த்தையால் சகலத்தையும் உண்டாக்கி இன்றும் ஆளுகை செய்கிறார் என்று விசுவாசிக்கிறோமா? நம் வாழ்க்கையிலும் அன்றாடம் இயேசுவின் ஆளுகை நிகழ்கிறதா? தேவனே நம் வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் அரசாளும் இராஜாவாக இல்லாவிட்டால் இன்றே ஒப்புக்கொடுப்போம்.

**2. ஆளுகை செய்ய கட்டமைப்பு** – ஒவ்வொரு அரசாங்கமும் பல்வேறு நிலைகளிலும் பல்வேறு கட்டமைப்புகளுடன் செயல்படுகிறது. நாம் இருக்கும் இடத்தில் தேவனின் ஆளுகைகளையும், இறையாண்மையையும் செயல்படுத்த அழைக்கப்படுகிறோம். நம் வீடுகளிலும், பணி செய்யும் இடங்களிலும், பொது இடங்களிலும் தேவனின் ஸ்தானாதிபதிகளாக நாம் வாழ்ந்து செயல்படவேண்டும். எங்கெல்லாம் நாம் விதிமீறல்களையும், சீர்கேடுகளையும் காண்கிறோமோ, அங்கெல்லாம் ராஜ்ஜியத்தின் பிரதிநிதிகளாக அதிகாரத்தோடும், வல்லமையோடும் நாம் சீரமைக்க அழைக்கப்படுகிறோம். ஒவ்வொரு நாளும் நம்முடைய நூற்றுக்கணக்கான தெரிந்தெடுப்புகளானாலும், அதின் முடிவுகளிலும் தேவனுடைய விலையுயர்ந்த பாத்திரங்களாய், அவருடைய ஆளுகையை செயல்படுத்தும் செயல்வீரர்களாய் மாற ஒப்புக்கொடுத்துள்ளோமா? என்பதை சிந்தித்து பார்ப்போம்.

**2. ஆளுகை செய்ய தேசம்** – பூமியும் அதின் சகலமும் கர்த்தருடையது (சங் 24:1) என்று நாம் வாசிக்கிறோம். சகலமும் தேவனின் ஆளுகைக்கு உட்பட்டது பரலோகம் மட்டுமல்ல, இந்த உலகமும் அதின் மக்களும், உலகின் அமைப்புகளும், அதின் அரசாங்கங்கள் அனைத்தும் தேவன் ஆளுகைக்கு உட்பட்டதாகும். இவ்வுலகில் தேவன் உண்டாக்காதது, தேவன் ஆளுகை செலுத்தாதது எதுவும் கிடையாது. இந்தியாவுக்கும், சீனாவிற்கும் இடையே உள்ள மெக்மெஹான் எல்லை கோட்டில் சந்தேகங்களும், கேள்விகளும் இருக்கலாம். ஆனால் எல்லையற்ற தேவ ராஜ்ஜியத்தை அறிந்து உணர்ந்த நாம் நம்முடைய வாழ்வில் தேவனே ராஜாவாக அரசாளுவதையும், அவருடைய ஆளுகை செலுத்துவதற்கான கட்டமைப்பையும், நம்முடைய வாழ்வில் ஆளுகை செலுத்தும் இடமாக அர்ப்பணித்திருக்கிற நாம் எந்த ஒரு சந்தேகங்களும், கேள்விகளும் எழும்பாமல் செயல்பட வேண்டும்.

நிதி மேலாண்மையில் சிறப்பாய் தேர்ச்சி பெற வேண்டுமென்றால் தேவராஜ்ஜியத்தில் நாம் யார், நம் கடமைகளும் உரிமைகளும் என்ன? என்ற புரிதலுடன் செயல்பட வேண்டும்.வேதாகம நிதி மேலாண்மை கொள்கைகளைப் பற்றியும் பணத்தை கையாளுவதைப்பற்றியும் வரும் மாதங்களில் பார்ப்போம்.

தொடரும்...

- Vinod Solomon

# குமாரனாகிய தேவன்

## இயேசு கிறிஸ்து

- Selva

இந்த இரண்டாம் வார செய்தியில் திரித்துவத்தின் நடுநபராக இருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை குறித்து கற்றுக்கொள்ள உள்ளோம். தெய்வத்தின் முகவரியாக இயேசு கிறிஸ்து ஒரு மானிடனாக இந்த பூமியில் பிறந்து, வளர்ந்து, பாடுபட்டு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த தெய்வம். ஒருவன் தெய்வத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்றால் அவன் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையையும், அவருடைய உபதேசத்தையும் அறிந்தால் போதுமானது. ஒருவன் மெய்யான தெய்வத்தை அடைய வேண்டுமென்றால் அவன் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் போதுமானது. பவுல் இதை இரத்தின சுருக்கமாக தெய்வத்தின் பரிபூரணமெல்லாம் கிறிஸ்து இயேசுவில் உள்ளது என்று கூறின மெய்யான வார்த்தையிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம். இந்த தெய்வத்தின் பரிபூரணமெல்லாம் அடங்கிய மனிதனாக பிறந்த தெய்வமும், தெய்வமாக வந்த மனிதனுமாகிய இயேசு கிறிஸ்துவை பற்றி நாம் முழுமையாக நம்ப வேண்டும், விசுவாசிக்க வேண்டும்.

இந்த வருட மூல உபதேசங்களில் வேரூன்றுகிற நாம் திரித்துவத்தின் மேல் அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அழைக்கப்படுகிறோம். அதே நேரத்தில் கிறிஸ்து இயேசுவின் மேலும் அவரின் பாடுமரண உயிர்த்தெழுதலின் மேலும் நாம் வேரூன்றுவோம்.

இயேசுகிறிஸ்துவானவர் பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் நிழலாட்டமாகவும், புதிய ஏற்பாட்டில் சுவிசேத்தின் காலங்களில் அவர் மனிதனாக பிறந்து நிறைவுறுதலாகவும், புதிய ஏற்பாட்டின் கடைசி அத்தியாயத்தில் மீண்டும் வரும் மணவாளனாகவும் காணப்படுகிறார். இயேசு கிறிஸ்து நமக்காக நம்மிடம் பரிந்து பேசுகிறவராக காணப்படுகிறார். ஆனால் இரண்டாம் வருகையிலோ அவர் நியாயாதிபதியாக வெளிப்படுவார். மூல உபதேசங்களை கற்றுக்கொள்ளுவதின் முக்கிய நோக்கம் நாம் அதை முழுமையாக வேதத்தை முறையாக வாசித்து ஆவியானவரின் ஒத்தாசையோடு அதை நம்ப வேண்டுமேயெழிய இயேசு கிறிஸ்துவை குறித்தோ அல்லது மற்ற மூல உபதேசங்களை குறித்தோ இங்கொன்றும் அங்கொன்றுமாக வசனங்களை எடுத்து வைத்துக்கொண்டு கேள்வி கேட்டு குழம்பி கொண்டிருக்ககூடாது. இந்த செய்தியில் இயேசு கிறிஸ்துவின் மானிட தெய்வ சிறப்பை அதின் முக்கிய பகுதிகளை வசன ஆதாரங்களோடு கீழே தருகிறோம்.

### I. இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தின் நிலை:

இயேசுகிறிஸ்துவை ஒரு மாபெரும் மனிதனாகவோ, தியாகத் தலைவராகவோ, மாபெரும் தீர்க்கதரிசியாகவோ ஏற்றுக்கொள்ள அநேகர் ஆயத்தம். ஆனால் அவரை தெய்வமாக ஏற்றுக்கொள்ள அநேகரால் முடியவில்லை. நாம் இதில் தோற்றுப்போய் விடக்கூடாது. இயேசு தெய்வம் மேலும் இயேசுவே தெய்வம் இதைக்குறித்து வேதத்திலும் சிலரது வாக்குறுதிகளை நாம் கேட்போம். யோவான்ஸ்நானகன் அவரை எனக்கு பின்வருகிறவர், எனக்கு முன்னிருந்தவர் என்கிறார். மேலும் மேன்மையுள்ளவர் என்கிறார் (யோவா 1:15,27,30). யோவான் அப்போஸ்தலன் ஆதியிலிருந்த வார்த்தை என்றும், ஜீவன் என்றும் குறிப்பிடுகிறார் (யோவா 1:1, 1 யோவான் 1:2). பேதுரு அப்போஸ்தலன் உலகதோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவர் (1 பேதுரு 1:20) என்று சொல்லுகிறார். பவுல் அப்போஸ்தலன் பிலிப்பியர் நிரூபத்தில் தேவனுடைய ரூபம், அவர் மனுஷ சாயலானார் என்று அனைவரும் புரிந்து கொள்ளும் விதத்தில் கூறுகிறார் (பிலி 2:6-8). இப்பொழுது கடைசியாக இயேசு கிறிஸ்து தன்னை குறித்து என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம். யோவான் 6:38ன் படி நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன் என்கிறார். மேலும் 51,61,62 வசனங்களில் அவர் தெளிவு படுத்துவதை காணலாம். எல்லாவற்றிற்கும் மேலாக யூதர்களுக்கு பதிலளிக்கும் பொழுது, நான் ஆபிரகாம் உண்டாவதற்கு முன்னே நான் இருக்கிறேன் என்கிறார் (யோவா 8:58).





இப்பொழுது இந்த தெய்வத்துவத்தில் காணப்படுகிற இயேசு கிறிஸ்துவை சிருஷ்டிப்பில் பார்க்க வேண்டு மென்றால் கொடுக்கப்பட்ட வசனங்களை கவனத்துடன் வாசியுங்கள் (யோவா 1:3; கொலோ 1:16; எபி 1:2,10). மேலும் சிருஷ்டிப்பிலும் இந்த அகிலத்திலும் அவரின் ஆளுகையை புரிந்து கொள்ள எபிரேயர் 1:3; கொலோ 1:17. கடைசியாக பிதாவோடு உள்ள ஐக்கியத்தை இயேசு குறிப்பிடுவதை யோவா 17:23,24 வசனங்களில் வாசித்து தெளிவடையலாம்.

**பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் நிழலாட்டமாக இயேசு:**

பழைய ஏற்பாட்டின் சரித்திரம் முழுவதிலும் கிறிஸ்துவை நாம் நிழலாட்டமாக காண முடியும். ஒவ்வொருவருடைய சரித்திரத்திலும் கிறிஸ்து ஒரு பகுதியாக வெளிப்படுவார். எடுத்துக்காட்டாக யோசேப்பை அவனுடைய சகோதரர்கள் எகிப்தில் சந்தித்த பொழுது அவனை தன் சகோதரன் என்று உணராமல் ஒரு புறஜாதியான் என்று பார்த்தார்கள். அதேபோல் கிறிஸ்துவின் வருகையிலும் யூதர்களுக்கு அவர் ஒரு புறஜாதிகளின் கடவுளை போல காணப்படுவார். மேலும் யோசேப்பு குழியிலிருந்து எடுக்கப்பட்ட பின்பு அந்த குழி வெறும் குழியாக காணப்பட்டது. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பின்பும், கல்லறையும் வெறும் கல்லறையாக காணப்படுகிறது. யோனாவின் சரித்திரம் அவர் உயிர்த்தெழுதலை எடுத்துக்காட்டுகிறது. இப்படியாக கிறிஸ்துவின் ஒவ்வொரு பகுதியையும், பழையஏற்பாட்டின் புருஷர்கள் ஒருசில இடங்களில் முன் அடையாளமாக காணப்படுவார்கள். அதே போல் பழைய ஏற்பாட்டின் புத்திரர்கள் கிறிஸ்துவை ஆங்காங்கே நிழலாட்டமாக பார்த்ததும் உண்டு. எடுத்துக்காட்டாக ஈசாக்கை பலியிட கொடுக்கும் பொழுது ஆபிரகாமுக்கு அவர் முட்செடியில் சிக்கின ஆடாக தென்படுகிறார். இதை இயேசு தனது ஊழிய காலத்தில் ஆபிரகாம் என்னை கண்டான். கண்டு களிகூர்ந்தான் என்று சொல்லுகிறார். தீர்க்கதரிசிகளும் கிறிஸ்துவின் ஒவ்வொரு ஊழிய பகுதியையும் தீர்க்கதரிசனமாக சொன்னதை பார்க்க முடிகிறது. குறிப்பாக, ஏசாயா அவரின் பிறப்பு மற்றும் அவரின் பாடுமரணத்தையும், மீகா அவர் பிறப்பின் இடத்தையும், சகரியா அவரின் பவனியையும் குறிப்பிடுவதையும் காணமுடிக்கிறது. மொத்தத்தில் இயேசுவானவர் தீர்க்கதரிசனத்தில் குறிப்பிட்டபடி பிறந்த தெய்வம்.

**மனிதனாக பிறந்த தெய்வம் இயேசு:**

மனுகுல அடிப்படையில் அவருக்கு பெற்றோர்கள் இருந்தார்கள் (லூக் 1:31; கலா 4:4). மேலும் ஆவி, ஆத்துமா, சரீரம் உடையவராக இந்த பூமியில் வாழ்ந்தார். அதற்கான வேதவசனங்கள் மத் 26:12; யோவா 12:27; மாற்கு 2:8, லூக் 23:46. அவர் ஊழிய நாட்களில் சமாரிய பெண்ணின் சாட்சியை பார்க்கும் பொழுது நீ யூதனாயிருக்க என்று சொல்லும் வாக்கியத்தில் அவர் ஒரு மனிதனாக, மனிதரோடு வாழ்ந்தவர் என்று புலப்படுகிறது. மேலும் அவருடைய மானிட தன்மையை சுருக்கமாக பார்ப்போம். இயேசுவானவர் மாம்சமும் இரத்தமும் உடையவர் (எபி 2:14), அவர் வளர்ந்தார் (லூக் 2:40), மனிதர்களிடம் கேள்வி கேட்டார் (லூக் 2:46), ஞானத்தில் வளர்ச்சியடைந்தார் (லூக் 2:52), ஜெபித்தார் (மாற்கு 1:35), சோதிக்கப்பட்டார் (மத் 4:1), கீழ்படிதலை கற்றுக்கொண்டார் (எபி 5:8), பசி உண்டாயிற்று (மத் 4:2), தாகம் எடுத்தது (யோவா 4:7), உறங்கினார் (மத் 8:24), கண்ணீர் விட்டார் (யோவா 11:35) கடைசியாக வியர்வையும், இரத்தமும் (லூக் 22:44), மரித்தார் (மத் 27:50), அடக்கம் பண்ணப்பட்டார் (மத் 27:59-60) இப்படியாக ஒரு மனித வாழ்க்கையில் நடைபெற்ற அனைத்தும் இயேசு கிறிஸ்துவில் இருந்தாலும் அவர் தெய்வம்.

**இயேசுவின் தெய்வத்தன்மை:**

இப்பூவுலகில் இயேசுவானவர் 33 1/2 ஆண்டு காலம் வாழ்ந்தாலும் அவர் தெய்வம் என்பதற்கான மேலும் ஒரு சில குறிப்புகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதில் முதலாவதாக அவர் சகல அதிகாரமும் உடையவர் (மத் 28:18), அவருடைய அதிகாரம் நோய்களுக்கு மேல் இருந்தது, விசுவாசிகளுக்கு மேல் இருந்தது, இயற்கைக்கு மேல் இருந்தது, பாவத்திற்கு மேல் இருந்தது, பாரம்பரியங்களுக்கு மேல் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக மரணத்திற்கு மேலும் இருந்தது. இவையனைத்தையும் சுவிசேஷ புத்தகத்தில் இயேசுவின் அற்புதங்களை வாசிக்கும் பொழுது கற்றுக்கொள்ள முடியும். இயேசுவானவர் எல்லாம் அறிந்தவர் (யோவா 2:24), ஒரு சில எடுத்துக்காட்டின் மூலமாக நாம் பார்ப்போம். நாத்தான்வேலை சந்திக்கும் பொழுது நீ அத்திமரத்தின் கீழ் இருக்கும் பொழுது உன்னை கண்டேன் என்கிறார் (யோவா 1:48), மேலும் சமாரிய ஸ்தீரியின் சரித்திரத்தை அறிந்திருந்தார் (யோவா 4:29), சகேயுவின் பெயரை அறிந்திருந்தார். மேலும் அநேக குறிப்புகளை சுவிசேஷ புத்தகத்தில் காணமுடியும். அவர் எங்கும் நிறைந்திருந்தவர் (மத் 18:20; 28:20; யோவா 3:13; 14:20) கடைசியாக அவரை தெய்வமாக ஆராதிப்பதாக ஒரு சில குறிப்புகளோடு இந்த பகுதியை நிறைவு செய்யலாம். இயேசுவை தூதர்கள் ஆராதித்தனர் (எபி 1:6), மேய்ப்பர்கள் ஆராதித்தனர், ஞானிகள் ஆராதித்தனர், தொழுநோயாளிகள் ஆராதித்தனர், ஆளுபவர்கள் ஆராதித்தார்கள் (மத் 9:18), செபதெயுவின் தாய் (மத் 20:20) மேலும் பிறவிக்குருடன், தோமா சில கிரேக்கர்கள் மற்றும் அவருடைய சீஷர்கள் (மத் 28:9).

அதி முக்கியமாக இயேசுவானவர், பாவங்களை மன்னித்தார் (மாற்கு 2:5, 10,11), தீர்ப்பு செய்யும் அதிகாரம் பெற்றவர் (யோவா 5:22), எல்லாவற்றிற்கும் மேலாக நம்மை இரட்சிக்கிறவர் (மத் 18:11 ; யோவா 10:28).

தம்பி, தங்கையே சிலுவையில்லாமல் மீட்பு இல்லை. இயேசு கிறிஸ்து இல்லாமல் பரலோகம் இல்லை. அவரை ஏற்றுக்கொண்டு நித்தியத்தை கழிக்க அவரில் வேரூன்றுவோம். இயேசுவே இரட்சியும் ஆமென்.




# கடந்தமாத ஜெப கரிசனைகள்

## CURRENT CONCERN

**1. அடிமையாக்கும் இணைய சூதாட்டங்கள், அழியும் குடும்பங்கள்:**

சமீப காலத்தில் ஆன்லைன் சூதாட்டத்தால் தற்கொலைகள், கொலைகள், கொள்ளைகள் போன்ற சம்பவங்கள் பெருகி உள்ளது. இதனால் பாதிக்கப்படும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் இதிலிருந்து வெளி வர, ஆன்லைன் சூதாட்டங்கள் எந்தக் கட்டுப்பாடுகளும் இன்றி, தொடர்ந்து விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றன. இது முற்றிலும் தடை செய்யப்பட, இதற்கு அடிமை யாவோர் சுயகட்டுப்பாட்டை இழந்து, வெளியே வர முடியாமல் தவிப்பது மட்டுமின்றி பெரிய பொருளாதார இழப்பை சந்தி க்கின்றனர். கடுமையான சட்டங்கள் உருவாக்கப்பட ஜெபிப்போம்.

**2. மருத்துவர் ஆலோசனை இல்லாமல் மெடிக்களில் மருந்து வாங்கி கொடுத்த தாய்..! பச்சிளம் குழந்தை உயிரிழப்பு.!**

மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் மருந்து வழங்கப்படுவதை மத்திய, மாநில அரசுகள் தடைசெய்ய, மருந்தக உரிமையாளர்கள் எச்சரிப்புடன் நடந்துகொள்ள, தற்போதைய வாழ்க்கை முறையில் பலர் மருத்துவ ஆலோசனை இல்லாமல் மருந்தகங்களில் மருத்துவாங்கி சாப்பிட ஆரம்பித்துவிட்ட நிலைமை மாற, விழிப்புணர்வுடன் செயல்பட,பெற்றோர் கவனமுடன் எச்சரிப்புடன் நடந்துகொள்ள, குழந்தைகளை நன்றாக பராமரிக்க, ம ருத்துவர்களை பார்க்க இன்றைய காலத்தில் பெறப்படும் பணம் ஏழை மக்களுக்கு ஏற்ற முறையில் பெறப்பட ஜெபிப்போம்.

**3. உறவினர் வீட்டிலிருந்து 70 ரூபாய் எடுத்த சிறுமி - ஆத்திரத்தில் சித்ரவதை செய்து கொன்ற தாய்!**

தன் சொந்த பிள்ளைகளை கூட அதீதமாக தண்டித்து கொடுமை செய்யும் கொடூர செயல்கள் நம் தேசத்தில் இருந்து அகல. இது போன்ற தகாத செயல்கள் செய்ய தூண்டும் எண்ணங்கள் சிறு பிள்ளைகளின் மனதிலிருந்து வேரிலேயே கிள்ளி எரியப்பட, சிறு வயது முதலே பிள்ளைகளை பெற்றோர் கர்த்தருக்குள் போதித்து நடத்த, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அன்புடன் கண்டித்து திருத்த ஜெபிப்போம்.

**4. போதையின் பிடியில் சிக்கும் சிறார்**

கடந்த 20 ஆண்டுகளில் போதைக்கு அடிமையாகும் இந்தியச் சிறாரின் எண்ணிக்கை 5 மடங்காக அதிகரித்துள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. சிறார்கள் இதிலிருந்து மீட்கப்பட, 2020-ம் ஆண்டு பொதுமுடக்கக் காலத்தில் ஏற்பட்ட தனிமை, வறுமை, குடும்ப வன்முறை, பாலியல் தொந்தரவு போன்றவற்றால், போதைப்பொருள் நுகர்வோர் பதிவுகள் 2021-ல் கூடுதலாகியுள்ளன. இப்படிப்பட்ட சூழ்நிலை மாற, தேசம் இயல்பு நிலைக்கு திரும்ப, இதற்கு அடிமையாகி தங்கள் உடல்நலனையும், மனநலனையும் தொலைத்து, நிரந்த நோயாளிகளாகும் நிலை மாற, பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் இம்மாணவர்களை அன்புடன் கையாள, இதிலிருந்து வெளிவர உறுதுணையாக இருக்க, சிறாரின் போதைப் பழக்கத்தைக் கட்டுப்படுத்த போதைத் தடுப்பு மையங்கள் அமைக்க, சட்டங்கள் கடுமையாக்கப்பட ஜெபிப்போம்.

**5. புயலை கிளப்புகிறது மனைவிகள் கைமாற்றும் விவகாரம்; நண்பர்களுக்கு மனைவியை விருந்தாக்கி வீடியோ எடுத்த கணவன்: போலீஸ் விசாரணையில் அம்பலம்:**

கேரளாவில் நடக்கும் கொடூரமான பாவங்களிலிருந்து மனந்திரும்ப, கேரளா முழுவதும் இது தொடர்பாக செயல்படுகிற 24 குழுக்கள் முற்றிலுமாக தடைசெய்யப்பட, தவறு செய்தோர் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட, இதனால் பாதி க்கப்பட்டோர் மனஅழுத்தத்திலிருந்து விடுதலைபெற, 1000 தம்பதிகள் தங்கள் மனைவிகளை மாற்றிக்கொள்ளும் அவலநிலை மாற, சாபத்திலிருந்து வெளிவர ஜெபிப்போம்.

**6. ஆன்லைன் வகுப்புகளால் கவன சிதறல் படிப்பை மறந்த மாணவர்கள்:**

தொடர்ந்து நடைபெறும் ஆன்லைன் வகுப்புகளால் மாணவ-மாணவிகளுக்கு கவன சிதறல் ஏற்பட்டு படிப்பே மறந்து போகும் நிலை இருப்பதாக கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலை விரைவில் மாறி நேரடி வகுப்புகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட, மிக முக்கியமானதாக கருதப்படும் அடிப்படையான ஆரம்ப கல்வி பாதிக்கப்படும் போது அது எதிர்காலத்தில் அவர்கள் கல்வி திறனை நிச்சயம் பாதிக்கும். மாணவர்கள் அதை உணர்ந்தவர்களாய் படிப்பில் கவனம் செலுத்த, ஆன்லைன் வகுப்புகள் மற்றும் தேர்வுகளில் பழகிய மாணவர்கள் நேரடியாக பள்ளிக்கு செல்லுவதற்கு தயங்குவது மட்டுமல் லாமல் படிப்பில் ஆர்வம் மிகவும் குறைந்துள்ளது. தங்கள் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நடக்க ஜெபிப்போம்

**7. 11-ம் வகுப்பு மாணவியை ஏமாற்றி கர்ப்பமாக்கிய ஓட்டுநர் - விமருந்தி தற்கொலைக்கு முயன்ற மாணவி உயிரிழப்பு.**

பள்ளியில் படிக்கும் மாணவிகள் ஞானத்துடன் செயல்பட,பாவங்களில் சிக்கி கொள்ளாமல் தப்பித்து நடக்க, மாணவிகளை ஏமாற்றும் நபர்கள் மனந்திரும்ப, இச்சையின் ஆவிகளிலிருந்து விடுதலைப்பெற, பெற்றோர் பிள்ளைகளை கவனமாக பாதுகாத்துக்கொள்ள, விடுதிகளில் தங்கி படிக்கும் பிள்ளைகளின் பாதுகாப்பாளர்கள், வார்டன் அன்புடன் நடந்துக்கொள்ள, பிரச்சனைகளை கையாள திறமையுடன் செயல்பட, பள்ளிகளில் பிள்ளைகளுக்கு தொடர்ந்து விழிப்புணர்வு ஆலோசனைகள் கொடுக்கப்பட, தற்கொலை தீர்வு அல்ல என்பதை புரிய வைக்க ஜெபிப்போம்.

**8. வேலை செய்த வங்கியிலே ரூ.1.85 கோடி திருட்டு... ஆன்லைன் சூதாட்டத்தில் பணத்தை இழந்த மேலாளர்!**

சூதாட்டத்தில் ஈடுபடுபவர்கள் அதிலிருந்து மனந்திரும்பி இரட்சிக்கபட, உழைத்து பணம் சம்பாதிக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் மனதை உறுதி செய்து கொள்ள, சூதாட்டத் தளங்களைச் சொந்தமாக வைத்திருக்கும் உரிமையாளர்கள் அதை மூட, பூமியும் அனைத்தும் தேவனுக்கே சொந்தம் என்பதை அனைவரும் புரிந்து கொண்டு, தங்கள் தேவைக்கு மனிதனையும் பணத்தையும் நோக்காமல், தேவனை நோக்க ஜெபிப்போம்.

**9. சாப்பாட்டுக்கு கூட திண்டாட்டம் திவாலாகும் இலங்கை கைகொடுக்கும் இந்தியா: வேடிக்கை பார்க்கிறது சீனா**

கொரோனா பாதிப்பை தொடர்ந்து, இலங்கையின் பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளது. இலங்கை அரசு நிர்வாகத்தை நடத்த முடியாமல் பெரும் சிக்கலை எதி ர்கொண்டுள்ளது. இலங்கையில் இந்த நிலை மாறவும், அண்டை நாடுகள் உதவவும், சீனாவிடம் வாங்கியது உள்ளிட்ட பல்வேறு கடன்கள் கழுத்தை நெரிக்க, வரலாறு காணாத பணவீக்கத்தால் தவிக்கிறது. இந்தக் கடன்சுமையில் இருந்து அத்தேசம் மீட்கப்படவும், உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்யக் கூட முடியாமல் தவிக்கிறது. இதனால், உணவுப் பொருட்கள் உள்ளிட்டவற்றின் விலை வரலாறு காணாத உச்சத்தை தொட்டுள்ளது. மக்களுக்கு வேண்டிய பொருட்கள் கிடைக்கவும், நாடு முழுவதும் வேலையில்லா திண்டாட்டம், வருவாய் இழப்பு, பசி, பட்டினி அதி கரித்து இலங்கை மக்களின் எதிர்காலமே கேள்விக்குறியாகி உள்ளது. தேவன் மனமிரங்கி இந்த சூழ்நிலையை மாற்றவும் பாரத்தோடு ஜெபிப்போம்.

**10. கடன் வாங்கி ஆன்லைன் ரம்மி விளையாட்டு... பெற்ற பிள்ளையை விற்ற தந்தை - திருச்சியில் அதிர்ச்சி!**

சூதாட்ட குணத்திற்காக தன் சொந்த பிள்ளைகளைக் கூட விற்க நினைக்கும் கொடூர எண்ணம் கொண்ட மக்கள் சிந்தித்து செயல்பட, இது போன்ற செயல்கள் செய்ய தூண்டும் எண்ணங்கள் மனதிலிருந்து வேரிலேயே கிள்ளி எரியப்பட, சரிவர வேலைக்குச் செல்லாமல், கிடைக்கும் கையிலிருக்கும் பணத்தை வைத்துக்கொண்டு ஆன்லைனில் விளையாடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிற மக்கள் ம னம் மாற, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளைத் தவறாது செய்ய தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம்.

- KTM




# உன்னத திட்டத்தை நோக்கி 2022

கடந்த ஆண்டில் நடைபெற்ற ஊழியங்களுக்காக தேவனைத் துதித்து,
இந்த ஆண்டின் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## துதிப்போம்:

ஆன்லைன் கூடுகைகள், நேரடி கூடுகைகள் மற்றும் முகாம்கள் மூலம் 7946 இளைஞர்கள் & 2249 இளம் வாலிபர்கள் சந்திக்கப்பட்டுள்ளனர்.

42 இளைஞர்கள் சிறப்பு கூட்டங்கள், 18 இளம் வாலிபர்களுக்கான ஜூம்(Zoom) சந்திப்புகள், 11 இளம் தம்பதியர் சந்திப்புகள் நடத்தப்பட்டன.

ஒரு 3 நாள் அர்ப்பணித்தோர் முகாம், 6 தலைவர்கள் முகாம், 16 ஒரு நாள் கூட்டங்கள் மற்றும் ஒரு 2 நாட்கள் முகாம் நடைபெற்றது.

2தலைமைத்துவ பயிற்சி நேரடியாக நடத்தப்பட்டது மற்றும் நான்கு இளைஞர்கள் மற்றும் இளம் வாலிபத் தலைவர்களுக்காக ஆன்லைன் பயிற்சி நடத்தப்பட்டது.

144 இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர் மற்றும் 8 இளம் வாலிபர்கள் தங்கள் படிப்புக்குப் பிறகு முழுநேர மினரியாக சேர உறுதி பூண்டனர்.

266 இளைஞர் ஜெபக்குழுக்கள் மற்றும் 26 இளம் வாலிபர் ஜெபக்குழுக்கள் நமது தேசத்திற்காகவும் பணிகளுக்காகவும் ஜெபிக்க நேரடி மற்றும் ஆன்லைன் கூடுகைகள் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா முகாமில் 41 இளைஞர்கள் & இளம் வாலிபர்கள் பங்கேற்று ஆசீர்வதிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

சங்கிலித்தொடர் ஜெபம், 11 இரவு ஜெபம், மற்றும் தினமும் காலை 5-6 மணி வரை 311 அருணோதய ஜெபங்கள் தொடர்ந்து நடைபெற்றது.

2021 இல் தோராவில் கிறிஸ்து என்ற தலைப்பின் கீழ் 12 மாத கேரீத் இதழை வெளியிட தேவன் உதவி செய்தார்.

## ஜெபிப்போம்.

50 ஒரு நாள் இளைஞர் கூடுகை

5 கிதியோனியர் முகாம் நடத்திட

10 இளைஞர் தரிசனமாலை கூடுகை

5 தீமோத்தேயு கூடாரம் – 2ம் நிலை தலைமைத்துவ பயிற்சி திட்ட கூடுகை நடத்த ஜெபிப்போம்

3 அர்ப்பணித்தோர் முகாம் நடத்திட

12 மிஷனெரி அர்ப்பணிப்புள்ள இளைஞர்களுக்கான Google Meet – மாதாந்தோறும் 3வது ஞாயிறு அன்று

5 உபவாச ஜெபம் & 5 இரவு ஜெபம்

50 சங்கிலித் தொடர் ஜெபம் – வாரந்தோறும் வியாழக்கிழமை நடத்த ஜெபிப்போம்

5 இளைஞர் பணித்தள பயணம்

5 இளைஞர் ஐக்கிய கூடுகை (ஞாயிறு மதியம்-3 மணிநேரம்-மாதாந்திரம்) – புதிதாக உருவாக்கப்பட்டது

12 இளைஞர் ஐக்கிய கூடுகை (மாதத்திற்கு ஒருமுறை ZOOM மூலம்) – 1 வது ஞாயிறு நடத்த ஜெபிப்போம்

12 இளம் வாலிபர் ஐக்கிய கூடுகை (மாதத்திற்கு ஒருமுறை ZOOM மூலம்) – 2வது ஞாயிறு நடத்த ஜெபிப்போம்

1 மாநில இளைஞர் முகாம் நடத்திட

1 தேசிய இளைஞர் முகாம் நடத்திட

5 இளம் தம்பதியர் ஒரு நாள் கூடுகை

12 இளம் தம்பதியர் கூடுகை (ZOOM) – 4வது ஞாயிறு நடத்த ஜெபிப்போம்

12 கேரீத் இதழ் ஆங்கிலம் மற்றும் தமிழில் வெளியிடப்பட ஜெபிப்போம்..

இளைஞர்களின் இதயத்தில் மிஷனரி பணியை குறித்த தாக்கத்தை ஏற்படுத்த 1 புத்தகம் வெளியிடப்பட வேண்டும்.
5 ஊடக ஆதாரங்கள் YouTube இல் வெளியிடப்பட வேண்டும்.

50 முழுநேர மிஷனரிகளை ஆதரிக்க

200 ஜெபக்குழுக்கள் உருவாக்க

100இளைஞர் ஒருங்கிணைப்பாளர்களை பயிற்சி அளித்து பலப்படுத்த,

100 இளம் தம்பதியர்களுக்கு 2ம் நிலை தலைமைத்துவப் பயிற்சி மிஷனெரி பணியை ஆதரிக்க இளைஞர்களை ஊக்குவிக்க ஜெபிப்போம்:

மேற்கூறிய திட்டமிட்ட கூட்டங்கள் அனைத்தும் எந்த ஒரு தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

தேவ திட்டத்தின்படி இந்த சவாலான குழுவை வழிநடத்த செல்வின் மற்றும் மெர்சி அக்கா அவர்களை தேவன் பெலப்படுத்த ஜெபிப்போம்.

இந்த ஊழியத்திற்கு உறுதுணையாக இருக்கும் தன்னார்வலர்களின் ஆவிக்குரிய வாழ்க்கைக்காக ஜெபிப்போம்.

எல்லாக் கூட்டங்களிலும் தேவ நாமம் மகிமைப்பட வேண்டும் என்று ஜெபிப்போம்.

கூட்டங்களில் கலந்துகொள்ளும் இளைஞர்களும் இளம் வாலிபர்களும் கிறிஸ்துவில் அதிகமாக வளர ஜெபிப்போம்.

இளைஞர்கள் மற்றும் இளம் வாலிபர்களிடையே எழுப்புதல் உண்டாக ஜெபிப்போம்.

- Selwyn




# தூங்கா மக்கள்

நம்மில் பலருக்கும் தூக்கம் என்பது ஒரு முக்கியமான காரியமாக தோன்றுவதில்லை. ஆனால் தூக்கம் நம் ஆயுசு நாட்களுக்கு தொடர்புடையது என்பது நம்மிடையே தெரியா கருத்தாக உள்ளது. மருத்துவ நிபுணர்கள் சராசரி மனிதனுக்கு 8 மணி நேரம் தூக்கம் அவசியம் என்கின்றனர். இப்படி வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் உலகில் 6 மணி நேரம் தூக்கமாவது இருக்க வேண்டும் என்பது பல வல்லுநர்களின் வேண்டுகோளாகும். பலர் தாங்கள் தூங்கும் நேரத்தில்தான் தங்களின் வேலையை செய்கின்றனர். சரியான கால நிர்வாகம் அவர்கட்கு இருக்குமாயின் இந்நிலைக்கு அவர்கள் வருவதில்லை.

தூக்கமின்மை இருதய கோளாறு, சர்க்கரை நோய் மற்றும் உடல் பருமன் போன்றவற்றை கொண்டுவரும். தூக்கமின்மையால் 3-5% பெரியவர்கள் உடல் பருமனால் அவதிப்படுகின்றனர். கிட்டத்தட்ட 20% சாலை விபத்துக்கள் சரியான தூக்கமின்மையால் வருகிறது. கூர்க்கா பணியாளர்களால் $411 பில்லியன் டாலர்கள் வருடந்தோறும் அமெரிக்கா செலவழிக்கிறது.

நம்மில் பலர் இவ்வாறு கேட்டிருப்போம். எனக்கு தூங்குவதற்கு நேரமில்லை. குடும்பத்தோடு நேரம் செலவழிக்க முடியவில்லை. சாப்பிட நேரமில்லை, ஜெபிக்க நேரமில்லை, வேதத்தை தியானிக்க நேரமில்லை. ஆனால் நமக்கு நம் னிலிணுஷ்யிளலை 40க்கும் மேற்பட்ட தரம் திறந்து பார்க்க நேரமிருக்கிறது. எப்படியாயினும் வேலைக்குக் குறித்த நேரத்துக்கு சென்றுவிடுகிறோம். சற்று யோசிப்போம். இயேசு நம்மை ஒரு மணி நேரமாவது விழித்திருந்து ஜெபியுங்கள் என்கிறார். இரவும், பகலும் அவருடைய வேதத்தின்மேல் தியானமாயிருக்கிற மனுன் பாக்கியவான் என்று வேதம் சொல்லுகிறது. இனி வேதம் வாசிக்க விழித்திருந்து ஜெபிக்க முயற்சிப்போம்.

## ஜெபக்குறிப்புகள்:

1. தூங்காமல் இரவு நேரங்களில் ரோந்து பணியில் ஈடுபடும் யறீய், போலீஸ், காவல் காக்கும் வாட்ச்மேன் மற்றும் பல முன்களப்பணியாளர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம். சமீபத்தில் ஒரு police(ஏட்டு) திருடர்களைப் இரவில் பிடிக்கச் சென்ற போது கொலை செய்யப்பட்டார்.

2. மன உளைச்சல், தாழ்வு மனப்பான்மை, எதிர்பாராத இழப்புகளால் இரவில் தூக்கம் இல்லாமல் வேதனைப்படும் மக்களுக்காய் ஜெபிப்போம்.

3. இன்சோம்னியா தூக்கமின்மை நோய், இதய நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு தூங்க முடியாமல் தவிக்கும் மக்களுக்காக ஜெபிப்போம்.

4. தூங்காமல் இரவு நேரங்களில் TV, மொபைலில் தேவையில்லாத, மனதை கறைப்படுத்தக்கூடிய காரியங்களை பார்க்கும் பழக்கத்தில் சிக்கி அல்லல்படும் வாலிபர்களுக்காய் ஜெபிப்போம்.

5. இரவு பகல் பாராமல் அயராது நோயாளிகளுக்கு வைத்தியம் பார்க்கும் டாக்டர்கள் செவிலியர்களின் வேலைப்பளு, மன உளைச்சல் ஆகியவை மறைய ஜெபிப்போம்.

6. இரவு நேரங்களில் கனரக வாகனங்களை ஓட்டிச் செல்லும் ஓட்டுநர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

7. வேலை பளுவால் இரவிலும் கண்விழித்து தங்கள் பணியை முடிக்கும் பல ஐ.டி நிறுவன பணியாளர்களுக்காக ஜெபிப்போம்.

8. கொரோனாவால் ஊரடங்கில் வீட்டில் இருக்கும் சிறுவர்கள் வாலிபர்கள் சரியான தூக்க சூழற்சியை கடைப்பிடிக்க ஜெபிப்போம்.

9. 73% இளம் வாலிபர்கள் சரியான தூக்கத்தை பெறுவதில்லை. இதனால் வரும் உடல் நலக்குறைவுகள், கவனமின்மை வளர்ச்சியின்மையிலிருந்து அவர்கள் காக்கப்பட ஜெபிப்போம்.

10. கால் சென்டர்கள், விமான ரயில் சேவைகளில் 24 x 7 நேரமும் பணியில் இருப்பவர்கள் ஆகியோரது உடல்நலம் சீராக இருக்க, அவர்தம் குடும்பத்தினர்களோடு அதிக நேரம் இல்லாததால் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் எல்லாம் சீராக ஜெபிப்போம்.

11. இராமுழுவதும் நம் இயேசு கிறிஸ்து ஜெபத்தில் விழித்திருந்தது போல நாமும் அந்த உன்னத பெலனைப் (லூக் 6:12) பெற ஜெபிப்போம்.

Ms. Hepzi



இந்தியாவின் மத்திய மேற்குக் கடற்கரை ஓரங்களில் இம்மக்கள் வசிக்கின்றனர். குறிப்பாக குஜராத், மஹாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் ராஜஸ்தானில் அதிகமாக காணப்படுகின்றனர். டுப்லா மற்றும் பீல் மொழி பேசுகின்றனர். இவர்களில் 25 உட்பிரிவுகள் உள்ளன. அதில் தலாவியா, சமுதாயத்தில் உயர்ந்த இடத்திலுள்ளனர். 1923-ம் ஆண்டு வரை இவர்கள் நில சொந்தகாரர்களுக்கு கொத்தடிமைகளாகப் பணி செய்தனர். வாழ்வதற்கு தேவையான அனைத்து காரியங்களுக்கும் இவர்கள் தங்கள் முதலாளியையே நம்பியிருந்தனர்.

கொத்தடிமை முறை அகற்றப்பட்டவுடன் நிலமற்ற டுப்லாவின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. அரசாங்கம் இவர்களுக்கு பல விதத்தில் சமுதாய முன்னேற்றத்திற்கு உதவி செய்தது. இவர்கள் பெரும்பாலும் புலம் பெயர்ந்து நகரங்களில் பணி செய்கின்றனர். ஒரு வருடத்தில் ஏழு மாதங்கள் தங்கள் குடும்பத்தோடு மும்பை பட்டணத்தின் அருகிலுள்ள செங்கல் சூளையில் பணி செய்கின்றனர். இவர்களில் அநேகர் மிகவும் பின் தங்கியவர்கள்.

பீல் கிராமங்களை ஒட்டியுள்ள ஆற்றங்கரைகளில் இவர்கள் வசிக்கின்றனர். இவர்கள் ஒரே அறையுள்ள வீட்டில் வசிக்கின்றனர். டுப்லாக்கள் அனைவருமே இந்துக்கள். தங்களுடைய ஆவிக்குரிய ஆலோசனைக்காக இவர்கள் பூஜாரி மற்றும் மந்திரவாதியை நாடுகின்றனர்.

நமது ஊழியம்:

டாங்ஸ் மாவட்டத்திலுள்ள இம்மக்களில் 30% பேர் விசுவாசிகளாக இருப்பதற்காக தேவனை துதிப்போம். டாங்ஸ் மாவட்டத்தில் தலைமைத்துவப் பயிற்சி மையம் கட்டப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகிறதற்காக தேவனைத் துதிப்போம். அஹ்வாவில் ஒரு சிறுமியர் விடுதி கட்டப்பட்டுள்ளதற்காக தேவனை துதிப்போம்.

மாதம் ஒரு மக்கள் கூட்டம்



# டுப்லா/ஹல்பதி

ஜெபிக்க:

1. தேவன் டுப்லா மக்களின் இருதயங்களில் தொடர்ந்து இடைபடவும் அநேகர் மனந்திரும்பவும் ஜெபிப்போம்.

2. அறுவடையின் தேவன் இவர்களின் ஆத்துமாக்களை கொள்ளைப் பொருளாக சம்பாதிக்கக்கூடிய அநேக ஊழியர்களை எழுப்பித்தர ஜெபிப்போம்.

3. விசுவாசிகளின் சாட்சியுள்ள வாழ்க்கை மூலம் அனைத்து டுப்லா இன மக்களும் கிறிஸ்துவின் மந்தையில் இணைய ஜெபிப்போம்.

4. பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள இம்மக்களின் வாழ்வாதாரங்கள் உயர்த்தப்பட ஜெபிப்போம்.

5. மந்திரவாதிகளை நாடும் இம்மக்கள் மெய்தேவனாகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.


6. டுப்லா இன மக்கள் கல்வியறிவு பெற்று சமுதாயத்தில் சிறந்த இடம்பெற ஜெபிப்போம்.

-Mrs.Sheela Mary

## கேரீத் மாத இதழின் பங்காளராகுங்கள்

ஒவ்வொரு கிறிஸ்தவனும் 16 அடிப்படை கிறிஸ்தவ மூல உபதேசங்களை அறிந்து கொள்வது மிக அவசியம். இந்த ஆண்டு முழுவதும் 12 மாதங்களாக தொடர்ச்சியாக கேரீத் இதழில் இதையே தியானிக்க உள்ளோம்


1. பரிசுத்த வேதாகமம்,
2. தேவன்,
3. தேவ தூதர்கள்
4. மனிதன் வீழ்ச்சி மீட்பு,
5. பாவம்,
6. மனிதனின் இரட்சிப்பு
7. ஞானஸ்நானம்,
8. திருவிருந்து,



9. வாக்குதத்தம்,
10. பரிசுத்த மக்கள் கூட்டம்,
11. சபை,
12. ஊழியம், சுவிஷேசம் அறிவித்தல்,
13. தீவ்ய சுகம்,
14. சபை எடுத்துக் கொள்ளப்படுதல்,
15. அக்கினி கடல்,
16. புதிய வானம், புதிய பூமி

இதுவரை சந்தாதாரராக ஆகவில்லை என்றால் ஆண்டிற்க்கு ருபாய் 250 மட்டும் செலுத்தி இன்றே கேரீத் மாத இதழின் சந்தாதாரராக மாறுங்கள்.தொடர்புக்கு : 044 26570404 / 9841973060

# 5 மாநில சட்டமன்ற தேர்தல் 2022



## உத்திரப்பிரதேசம்
## பஞ்சாப்
## கோவா
## உத்ரகாண்ட
## மணிப்பூர்

5 மாநில சட்டமன்ற தேர்தலில் வாக்களிக்க உள்ள மொத்த வாக்காளர்கள் : 18.34 கோடி

முதல் முறை வாக்கு செலுத்தும் வாக்காளர்கள் : 24.98 லட்சம்

கடந்த ஆண்டை விட 16 சதவீதம் அதிகமான வாக்குச்சாவடிகள் இந்த ஆண்டு அமைக்கப்பட உள்ளன.

5 மாநில சட்டமன்ற தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறவுள்ளன.

உத்திரப்பிரதேசத்தில் பிப்ரவரி 10,14,20,23,27 மற்றும் மார்ச் 3,7 ஆகிய தேதிகளில் 7 கட்டங்களாக தேர்தல் நடைபெற இருக்கிறது.

மணிப்பூரில் சட்டமன்ற தேர்தல் 2 கட்டங்களாக நடைபெறும்.

மணிப்பூர் மாநிலத்தில் பிப்ரவரி 27 மற்றும் மார்ச் 3 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற இருக்கிறது.

பஞ்சாப்பில் பிப்ரவரி 20தேதியில் தேர்தல் நடைபெற இருக்கிறது.

உத்ரகாண்ட், கோவா இந்த இரண்டு மாநிலங்களிலும் ஒரே கட்டமாக பிப்ரவரி 14 ஆம் தேதி தேர்தல் நடைபெறும்.

### தேர்தல் முடிவுகள்

இந்த 5 சட்டமன்ற தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மார்ச் 10 ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

### தற்போதைய ஆட்சி நிலவரம்

இந்த 5 மாநிலங்களில் பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் தற்போது காங்கிரஸ் ஆட்சி செய்து வருகிறது. மீதமுள்ள 4 மாநிலங்களிலும் பி.ஜே.பி ஆட்சி செய்து வருகிறது.

## ஜெபக்குறிப்புகள்:

ஜனங்கள் மேல் கரிசனை உள்ள தலைவர்களை கர்த்தர் தேர்தல் மூலம் ஏற்படுத்தித் தர ஜெபியுங்கள்.

சமாதானமாக, சுமூகமான முறையில் தேர்தல் நடைபெற ஜெபியுங்கள்.

மதவாத, இனவாத அரசியலுக்கு ஜனங்கள் விலை போகாதபடி, தெளிந்த சிந்தனையோடு வாக்களிக்க ஜெபியுங்கள்.







-KTM

# ஜெபியுங்கள்



# உலக சமூகநீதி நாள்



மண்ணில் பிறந்த அனைவரும் சமமானவர்கள். பொருளாதாரம், உணவு, கல்வி, வேலைவாய்ப்பு, பாலியல், ஜாதி, இனம், மதம், மொழி, வயது, கலாச்சாரம் என எவ்வித பாகுபாடும் இல்லாமல் ஒரே சமூகமாக மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும். சமூகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும், அடிப்படை தேவைகள் மற்றும் அடிப்படை உரிமைகளை பெற்று மரியாதையுடன் வாழ வழி அமைத்தலே சமூக நீதி. ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு சமூக நீதி இன்றியமையாதது. எங்கே நீதி மறுக்கப்படுகிறதோ, அங்கே ஜனநாயகம் மெலிந்து ஊழல் மலிந்து காணப்படும். எனவே ஒரு நாட்டின் ஆட்சி மற்றும் நீதி நெறிமுறைகளுக்கு, அச்சமுதாயத்தில் வறுமைக்கும் தொடர்பு உண்டு. நாட்டின் வளங்கள், வருமானம், வாய்ப்புகள் பகிர்ந்து அளிக்கப்படுவதில் சமத்துவமும், பாரபட்சமின்மையும் கடைபிடிக்கப்படவேண்டும். வளர்ச்சி திட்ட பாதையில் இந்தியாவில் வறுமை ஒழிப்பு, கொடிய நோய்கள் பரவாமல் தடுத்தல், ஆரம்ப கல்வி கிடைக்க செய்தல் போன்ற இலக்குகளில் வரவேற்கதக்க மாற்றங்களை கொண்டு வந்தாலும், அரசியல் பங்களிப்பு, வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு முழு உரிமைக்கிடைப்பதில் இன்னும் சிக்கல்கள் உள்ளது.

உலக நீதி நாள் என்பது உலக நாடுகள் முழுவதும் ஆண்டுதோறும் பிப்ரவரி 20 ஆம் நாளன்று கடைபிடிக்கப்படும் நாளாகும். வறுமையை ஒழிப்பதற்கும், முழுவேலைவாய்ப்பு மற்றும் கண்ணியமான வேலை மக்களுக்கு வழங்குவதற்கும், ஆண்கள் மற்றும் பெண்கள் சமத்துவத்தை அடைவதற்கும், அனைவருக்கும் சமூக நலன் மற்றும் சமூக நீதியை நிறுவுவதே இதன் நோக்கம். அனைவருக்கும் சமவாய்ப்பு மற்றும் உரிமைகள் வழங்கி தேசத்தில் அமைதியையும், வளர்ச்சியையும் காண ஜெபிப்போம்.

## ஜெபக்குறிப்புகள்:

1. பஞ்சம், பட்டினியில் வாழும் வறியோருக்கு தேவையான உணவு, உடையும் கிடைக்கச்செய்து, தனி மனித வளர்ச்சிக்காக புதிய சிறந்த வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட ஜெபிப்போம்.

2. இந்தியாவில் 70.3 மில்லியன் மக்கள் மிக கடுமையான வறுமையில் இருப்பதாக அண்மையில் வெளியான ஆய்வுஅறிக்கை கூறுகிறது. வறுமையற்ற இந்தியாவை கட்டி எழுப்ப தடையாக இருக்கும் சமூக தீமைகளை வேரறுத்து, அடித்தட்டில் இருக்கிற மக்களை கைத்தூக்கி விட ஜெபிப்போம்.

3. இந்தியாவில் கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வேலைவாய்ப்பின்மை அதிகரித்துள்ளது. 2017-2018 நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், வேலைவாய்ப்பின்மை 6.1% உயர்ந்துள்ளது. இதிலுள்ள சவால்கள் நீக்கப்பட்டு அனைவருக்கும் கண்ணியமான வேலை வழங்கப்பட ஜெபிப்போம்.

4. ஜாதி, மத, இன, பாலியல் வேறுபாடுகள் அடிப்படையில் பாகுபாடு இல்லாமல் பொது நிறுவனங்களில் பாரபட்சமற்ற சம வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும். சமூக நீதியை மையப்படுத்தி வரையறுக்கப்பட்ட சட்டங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட ஜெபிப்போம்.

5. இந்தியாவில் உள்ள பத்தில் 6 வீடுகளில் சுத்தமான குடிநீருக்கு போதிய முக்கியத்துவம் தருவதில்லை. ஒவ்வொரு நாடும் தன் மக்களின் சம உரிமையை மதிக்கவும், அவர்களுக்கு சமவாய்ப்பை அளிக்கவும் ஜெபிப்போம்.

6. சமூக உரையாடல் மற்றும் பணியிடத்தில் அடிப்படை கோட்பாடுகள் மற்றும் உரிமைகள் மூலம் அனைவருக்கும் சமமான முடிவுகள் எட்டப்படுவது உறுதி செய்யப்பட ஜெபிப்போம்.

7. நாடுகளுக்கிடையே சமாதானத்தையும் பாதுகாப்பையும் அடைவதற்கும் பராமரிப்பதற்கும் சமூக நீதி இன்றியமையாதது. அனைவருக்கும் அடிப்படை உரிமையான ஆரோக்கியமான உடலும், மனதும் கிடைக்கப்பட, தேசங்களில் சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

8. பழங்குடி மக்கள் மற்றும் புலம் பெயர்ந்தோரின் உரிமைகள் மீட்கப்பட ஜெபிப்போம்.

9. தொழிலாளி மற்றும் முதலாளி இடையேயான ஆரோக்கியமான உறவையும், அத்துடன் பணியாளர் தனது கடமைகளை முறையாக நிறைவேற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உளவியல் நிலைமைகளை உறுதி செய்ய ஜெபிப்போம்.

10. அனைத்து மக்களுக்கும் சமமான சுகாதார உரிமை உறுதி செய்யப்பட ஜெபிப்போம்.

*- Mrs. Steffi*



# திரு. கிறிஸ்டோபர் மோசஸ் (1943-1983)

கடந்த ஆண்டுகள் முழுவதும் நாம் பல நாடுகளில் பணிசெய்த மிஷனெரிகளின் வாழ்க்கை சரிதைகளை குறித்து படித்தோம். தற்போது நமது இயக்கத்தில் பணி செய்து கோதுமை மணிகளாக மரித்த மிஷனெரி சகோதர, சகோதரிகளின் வாழ்க்கை சரித்திரத்தை குறித்து அறிந்து கொள்வோம். ஆதி நாட்களில் அவர்களின் தியாகமான அர்ப்பணிப்பு, ஊழியங்களை குறித்து அறிந்து கொள்ள இது உதவியாக இருக்கும் என்று விசுவாசிக்கிறோம்.

## பிறப்பு:

திரு. கிறிஸ்டோபர் மோசஸ் 1943 டிசம்பர் 17 ஆம் தேதி கரூரில் பிறந்தார். அவரு டைய பெற்றோர் தி ரு. வரம் மோசஸ், திருமதி.கிரேஸ் வரம் மோசஸ். இருவரும் ஆசிரியர்கள். அவர்களுக்கு ஐந்தாவது மகனாகப் பிறந்தார் கிறிஸ்டோபர் மோசஸ். இவருடைய தம்பி மோகன் ராஜ் பிறக்கும் பொழுது அவர்கள் அம்மா கிரேஸ் வரம் இறந்து விட்டார்கள். ஆறு பிள்ளைகளையும் வளர்க்கும் பெரிய பொறுப்பு திரு. வரம் மோசஸ் மேல் வந்தது. பிள்ளைகளை நன்றாக வளர்க்க டோனாவூர் ஐக்கியத்தைச் சார்ந்த சகோதரி மரகதத்தை மறுமணம் செய்தார். ஆண்டவருக்குப் பயப்படுகின்ற பயத்தோடு திரு. கிறிஸ்டோபர் மோசஸ் எந்த ஒரு காரியத்திலும், உண்மையாகவும், நேர்மையாகவும் இருந்து வந்தார். ஆனாலும், சிகரெட் புகைக்கும் பழக்கத்தி ற்கு அடிமையாக இருந்து வந்தார்.

## திருமண வாழ்க்கை:

1972ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் தேதி கிறிஸ்டோபர் மோசஸ் சகோதரி. சுகந்தியைத் திருமணம் செய்தார். தன்னுடைய பள்ளி இறுதிப் படிப்பிற்குப்பின் 2ஆம் நிலை ஆசிரிய பயிற்சியை முடித்து பெற்றோரைப் போன்று சின்னதாராபுரத்திலும், உடுமலைப்பேட்டையிலும், ஏனைய இடங்களிலுமுள்ள திருமண்டல பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். சகோதரி. சுகந்தி 1950ஆம் ஆண்டு பிப்ரவரி 26ஆம் தேதி பிறந்தவர். அவருடைய பெற்றோர் திரு. வில்லியம்ஸ், திருமதி. மெர்சிவில்லியம்ஸ் ஆவர். சகோதரி சுகந்தி தன்னுடைய பள்ளி இறுதிப்படிப்பை முடித்து தட்டச்சு மேல் நிலை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். இந்தத் தம்பதியர்களுக்கு 1973ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆண்டவர் கொடுத்த முதல் பெண் குழந்தையை ஆண்டவருடைய பணிக்கென ஒப்புக்கொடுத்தி ருந்தார்கள். அடுத்து 1975 ஆம் ஆண்டு டிசம்பர் 20ஆம் தேதி ஒரு ஆண் குழந்தையையும் அவர்களுக்கு ஆண்டவர் தந்தார். இரண்டாவது மகன் மோசஸ் எபிநேசர் 9 மாத குழந்தையாக இருக்கும்பொழுது கிறிஸ்டோபர் மோசஸ் புகைபிடிக்கும் பழக்கத்தால் உடல்நிலை பாதிக்கப்பட்டு மோசமான நிலைக்கு அதாவது சுவாசிக்கவே முடியாத நிலைக்கேபோய் விட்டார். அந்த நாட்களில் சகோதரி. சுகந்தி ஆண்டவரைப் பற்றிக் கொண்டு தன் கணவருக்காக ஜெபித்து வந்தார். கணவர் மருந்து சாப்பிட்டும் எந்தவித பயனும் இல் லாததால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை சற்று பயன் தந்து, படிப்படியாக உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது. ஒரு நாள் அதிகாலையில் ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார் என்ற முழு பாடலும் மெல்லிய சத்தத்துடன் கிறிஸ்டோபர் மோசஸ் அவர்களின் செவிகளில் கேட்டது. அந்த நாளில் ஆண்டவரின் அற்புத தொடுதலினால், முழுமையாக தேவனுக்குத் தன்னை அர்ப்பணித்து வி டமுடியாத சிகரெட் புகைக்கும் பழக்கத்தை விட்டு விட ஆண்டவர் உதவி செய்தார். தங்களது இரு பிள்ளைகளோடு குடும்பமாக தினந்தோறும் ஜெபித்து தன் ஆசிரியப்பணியை கிறிஸ்டோபர் செய்து வந்தார்.

## அர்ப்பணிப்பு:

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அறிமுகம் கிடைக்கவே, ஊழியத்தில் ஆர்வம் கொண்ட அரியலூர் நண்பர்களுடன் கிறிஸ்டோபர் சேர்ந்து அறைகூவல் கூடுகைகள் நடத்த ஆரம்பித்தார். அந்த நாட்களில் திருச்சி மாவட்டத்தலைவர் திரு. ஹேமசந்திரன், திரு. டைட்டஸ் ஐயா, திரு புஷ்பநாதன் போன்ற ஜெபக்குழுத் தலைவர்கள் அவருடைய வீட்டிற்கு வந்து ஜெபித்துப் போவார்கள். பின்பு வீட்டிலேயே ஜெபக்குழு ஒன்றை ஆரம்பித்து வாரந்தோறும் அநேக ஆசிரியர்களுடன் வட இந்திய மிஷனெரிகளுக்காகவும், மற்றும் இதர ஜெபக் குறிப்புகளுக்காகவும் ஜெபித்து வந்தார். அந்நாட்களில் கிறிஸ்டோபர் தேவ ஒத்தாசையோடு, மற்ற சகோதரர்களோடு சேர்ந்து கிராமங்களில் வல்லமையாய் ஊழியங்களைச் செய்தும், இயேசு கிறிஸ்துவின் வல்லமை யால் அநேக பிசாசுகளைத் துரத்தியும், அவர்களைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தியும் வந்தார். 26.01.1980 இல் கரூரில் நடந்த கிதியோனியர் முகாமில் திரு. ஸ்டான்லி பிரின்ஸ் அண்ணன் அவர்கள் சந்தியாவில், ஊழிய அழைப்பைக் குறித்து பேசும்பொழுது திரு. கிறிஸ்டோபர் மோசஸ் தன்னை முழுவதுமாக ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தார். பின்பு ஊழிய அழைப்பை, மனைவி சுகந்தியிடம் பகிர்ந்தும், ஜெபித்தும் வந்தார். சகோதரி. சுகந்தியும் தன்னை அர்ப்பணித்து குடும்பமாக மிஷனெரிகளாகச் செல்ல ஒருமனப்பட்டவர்களாக ஜெபத்தில் வைத்து தீர்மானித்தார்கள். 14 ஆண்டுகள் ஆசிரியராகயிருந்த இவர் இறுதியில் அரியலூரில் ஆசிரியராகப் பணிசெய்தபோது ஆசிரியப்பணியை 1980 ஆம் ஆண்டு ராஜினாமா செய்தார். உடன் ஆசிரியர்களும் தலைமை ஆசிரியரும் வேலையை விட்டுவிட வேண்டாம் என்று பலவிதமான ஆலோசனைகளைச் சொன்னார்கள். ஆனால் மனம்ச பிரகாரமாக எந்தவித முடிவும் எடுக்காமல் ஆண்டவருடைய சத்தத்திற்கு மட்டுமே கீழ்படிந்து ஆசிரியர் பணியைத் துறந்து மிஷனெரியாகச் செல்ல தீர்மானித்தார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் முழு நேரப்பணியாளராக 1980 ஆம் ஆண்டு ஜுன் மாதம் இணைந்தார். பின்பு மிஷனெரிப் பயிற்சிக்காக டேனிஷ்பேட்டை, பெத்தேல் வேதாகம பயிற்சி நிலையத்திற்கு ஒரு வருடம் பயிற்சிக்காக குடும்பமாக அனுப்பப்பட்டார்கள். பின்பு குஜராத் மாநிலத்திலுள்ள சோன்கார்டு என்ற பணித்தளத்திற்குக் குடும்பமாக அனுப்பப்பட்டார்கள். குஜராத்தி மொழியைக் கற்றுக்கொண்டார்கள். சுதேச ஊழியருடன் சேர்ந்து குடும்பமாக கிராமங்களுக்குச் சென்று ஊழியம் செய்தார்கள். அந்நாட்களில் மிஷனெரிகளுடைய பிள்ளைகள் படிக்க ஏற்ற பள்ளிகள் இல் லை. எனவே அனைத்து மிஷனெரிகளுடைய பிள்ளைகளையும் உத்திரப்பிரதேசத்திலுள்ள ஜாண்சியில் மிஷனெரிப் பிள்ளைகளுக்கென ஆரம்பிக்கப்பட்ட விடுதியில் தங்க வைத்து படிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கிறிஸ்டோபர்

மோசஸ் அவர்களின் இரு பிள்ளைகளான மெர்சி மற்றும் மகன் மோசஸ் இருவரையும் அங்கே படிப்பதற்காக சேர்த்திருந்தார்கள். சின்ன பிள்ளைகளானதால் பெற்றோர்களின் பாசத்திற்கு மிகவும் ஏங்கினார்கள். பெற்றோர்களிடமிருந்து கடிதம் வந்தால் உடனே இரண்டு பேரும் அழ ஆரம்பித்து விடுவார்களாம்.

சகோ. கிறிஸ்டோபர், சகோதரி. சுகந்தி இருவரும் பிள்ளைகளை ஜெபத்தில் தாங்கி ஆண்டவருக்குள் பெலப்பட்டார்கள். சோன்கார்டு பணித்தளத்திற்குப் பிறகு 1982ஆம் ஆண்டு பணித்தளத்திலிருந்து வியாரா என்ற இடத்திற்குக் கிறிஸ்டோபர் குடும்பம் மாற்றம் செய்யப்பட்டார்கள். விசுவாசிகளின் பிள்ளைகளைக் கண்காணிக்கும் பொறுப்பைப் பணித்தள இயக்குநர் அருள்திரு. தேவதாஸ், கிறிஸ்டோபரிடம் கொடுத்தார்கள். ஆசிரியர் பணியில் பிள்ளைகளைக் கவனிக்கும் பொறுப்பில் அனுபவம் இருந்ததால் இந்தப் பொறுப்பு கிறிஸ்டோபருக்குக் கொடுக்கப்பட்டது. பிப்பள்வாடா, கர்சி, அஹ்வா ஆகிய மூன்று இடங்களிலும் ஆதிவாசி பிள்ளைகளுக்கென விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டு, அதை நல்ல முறையில் கிறிஸ்டோபர் மோசஸ் நடத்தி வந்தார்.

#### டோனாவூரில் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட மிஷனெரிப் பிள்ளைகளுக்கென சந்தோஷ் வித்யாலயா:

திருநெல்வேலி மாவட்டம், டோனாவூரில் மிஷனெரிப் பிள்ளைகளுக்கென ஆரம்பிக்கப்பட்ட சந்தோஷ் வித்யாலயா பள்ளியில் அனைத்து வசதிகளும் இருப்பதால் அங்கே பிள்ளைகளைச் சேர்க்க இயக்கம் முடிவு செய்து மிஷனெரிகளை உற்சாகப்படுத்தியது. ஜாண்சியில் மிஷனெரிப் பிள்ளைகளுக்கென ஆரம்பிக்கப்பட்ட விடுதி மூடப்பட்டு, பிள்ளைகளைத் டோனாவூரிலுள்ள சந்தோஷ் வித்யாலயாவில் சேர் த்தார்கள். சகோ. கிறிஸ்டோபர் மோசஸ் விடுதியைக் கவனிக்க வேண்டியதாக இருந்தபடியால் 1983ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் தேதி பிள்ளைகளுக்கு ஆலோசனைகளைச் சொல்லி, நெற்றியில் சிலுவை அடையாளத்தையிட்டு சகோதரி. சுகந்தியையும், பிள்ளைகள் இருவரையும் சூரத் ஸ்டேஷனிலிருந்து வழியனுப்பிவிட்டார்.

## இறுதி நாட்கள்:

ஜுன் மாதம் 2ஆம் தேதி சந்தோஷ வித்யாலயா பள்ளிக்கூடம் ஆரம்பமானவுடன் ஜுன் 5ஆம் தேதி திருமதி. சுகந்தி புறப்பட்டு குஜராத்துக்கு 7 ஆம் தேதி சென்றடைந்தார்கள். திருமதி. சுகந்தி குஜராத்துக்கு வந்த நாட்களிலிருந்து கிறிஸ்டோபர் மோசஸுக்கு ஜுரம் விட்டு விட்டு வந்ததால், மாத்திரை சாப்பிட்டும் குறையாமலிருந்தது. ஜுன் மாதம் 14ஆம் தேதி வியாராவிலுள்ள ஆஸ்பத்திரியில் பரிசோதனை பண்ணின பொழுது உயர் இரத்த அழுத்தம் மற்றும் ஜுரம் இருந்ததால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மூன்று நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்குப் பிறகு 17ஆம் தேதி பூரணசுகம்பெற்றிருந்தார். நல்ல தெளிவாக இருந்த காரணத்தினால் திருமதி. சுகந்தி அரிசி கஞ்சியும், பாலும் எடுத்து வரப்போயிருந்தார்கள். அந்த நேரம் கிறிஸ்டோபர் மோசஸ் தானாகவே எழுந்து தண்ணீர் குடிக்க முயன்ற பொழுது, மயக்கம் வந்து கீழே விழுந்தார். மருத்துவமனையில் உள்ளவர்கள் அவரைக் கட்டிலில் படுக்க வைத்தார்கள். குறைந்திருந்த ஜுரம் அதிகரிக்கவே குளிர்ந்த தண்ணீரில் துணியை நனைத்து கிறிஸ்டோபர் நெற்றியில் வைத்துக் கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு கிறிஸ்டோபர் மோசஸ் தானாகவே மூன்று மொழிகளில் பேசவும், உளறவும் ஆரம்பித்தார். சகோதரி. சுகந்தி மருத்துவமனையில் டாக்டரைத் தேடினார். டாக்டர் வெளியூர் சென்றிருந்ததால் அந்த நேரத்தில் வரமுடியாத சூழ்நிலையாக இருந்தது. இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு ஒரு டாக்டர் மருத்துவமனைக்கு வந்தார். அவர் முடிந்த அனைத்து முயற்சிகளையும் எடுத்தார். சற்று நேரத்தில் இரத்த வாந்தி எடுத்து தன் சுய நினைவை கிறிஸ்டோபர் இழந்து இரண்டு மணி நேரம் சுவாசிக்க முடியாமல் கஷ்டப்பட்டு சிகிச்சை பலனின்றி 17. 06. 1983 அன்று மாலை 5 மணி க்குக் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். திருமதி. சுகந்தி ஆண்டவரிடத்தில் தன் கணவரை ஒப்படைத்து தன்னை கிறிஸ்துவுக்குள் பெலப்படுத்தினார். சகோதரி. சுகந்திக்குக் கணவன் இறக்கும் பொழுது, வயது 32 மட்டுமே. சகோதரி. சுகந்தி கிறிஸ்டோபர் தன்னை ஆண்டவருக்குள் பெலப்படுத்திக்கொண்டு தொடர்ந்து பிள்ளைகளை டோனாவூரிலேயே படிக்க வைத்தார். காலங்கள் உருண்டோடின.


தனியாகப் பணிக்களத்தில் பணியாற்றுவது கடினம் என மூத்த அண்ணன்மார் எண்ணியதால் சகோதரி சுகந்தியை திருச்சி அலுவலகத்தில் பணியாற்ற வழிநடத்தினார்கள். 1983ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து திரு. கிருபாகரன் அண்ணனுக்கு முன்னேற்றப்பணி அலுவலகத்தில் தட்டச்சுப் பணி மற்றும் அலுவலகப் பணிகளில் உதவி செய்து வந்தார். டோனாவூரில் இரண்டு பிள்ளைகளும் பத்தாவது வரை படித்து, திருச்சியில் 11, 12, வது படிப்பைத் தொடர்ந்தனர். தொடர்ந்து பிள்ளைகள் இயக்கத்தின் உதவியோடு இளங்கலை மற்றும் முது கலை பட்டப்படிப்பை பிஷப்ஹூபர் கல்லூரியிலேயே முடித்தனர். பிள்ளைகள் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்ற அனுபவத்தைப் பெற்றிருந்தபடியால் படிக்கும் பொழுதே நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவி ன் இளைஞர் பிரிவில் சேர்ந்து நேரம் கிடைக்கும் போதெல்லாம் இருவரும் ஊழியத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார்கள். மகள் மெர்சி வாலிப ஜெபக்குழுத்தலைவியாக திருச்சியில் இருந்து ஊழியம் செய்தார். மகன் மோசஸ் நமது கூடுகைகளில் இசைக்கருவி இசைத்து உதவி செய்து வந்தார்.

## பிள்ளைகளின் ஆசீர்வாதம்:

மெர்சி தந்தையைப் போல ஊழியத்திற்கென்று தன்னை அர்ப்பணித்திருந்தாள். படிப்பு முடித்தவுடன் முதலில் மெர்சிக்கு World Vision-ல் வேலைகிடைத்தது. கோயம்புத்தூருக்கு அருகே உள்ள அவிநாசியில் தங்கி வேலை பார்த்துக்கொண்டே, வாலிபர்கள் மத்தியில் ஊழியமும் செய்து வந்தாள். மோசஸ் எபினேசர் பட்டப்படிப்பை முடித்து விட்டு வேலை தேடிவந்தான். முன்பின் தெரியாத ஒருவர் வழியாக மஹாராஷ்டிராவிலுள்ள பூனா பட்டணத்தில் மென்பொறியாளர் வேலை கிடைத்தது.

சகோதரி. சுகந்தி கிறிஸ்டோபர், மகள் மெர்சிக்கு வாழ்க்கைத் துணையைத் தேட ஆரம்பித்தார். ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் மிஷனெரி திரு. ஜெசுதாஸ் மோசஸ் என்பவரைத் தெரிந்தெடுத்து இருவரின் திருமணமும் திருச்சியில் ஆண்டவருடைய பிரசன்னத்தோடு நடந்தது. இருவரும் மிஷனெரிகளாக சித்தேரியில் ஊழியம் செய்து வந்தார்கள். ஆண்டவர் அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். மகளின் திருமணத்திற்குப் பின் மகன் மோசஸ் எபினேசருக்கு மிக விரைவாக திருமணம் ஒழுங்காகி சிறப்பாக நடைபெற்றது. இவ்விதமாக தனக்கு ஊழியம் செய்ய வந்த குடும்பத்தைத் தேவன் வழிநடத்தி பராமரித்து ஆசீர்வதித்துள்ளார். மோசஸ் குடும்பமாக தற்பொழுது அமெரிக்க தேசத்தில் பணியாற்றி வருகிறார்கள். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முன்னேற்றப்பணியில் உதவி செய்து வருவதோடு, ஜெபித்தாலும், பொருளாதார உதவியாலும் தேவனை மகிமைப்படுத்தியும் வருகிறார். பல ஆண்டுகளாக திருச்சி அலுவலகத்தில் பணியாற்றிய சகோதரி. சுகந்தி கிறிஸ்டோபர் 01.12.2009 அன்று பணி ஓய்வு பெற்று திருச்சிராப்பள்ளியில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் குடும்பத்தின் பிள்ளைகளை நம் ஜெபத்தில் தாங்குவோம்.

- MMM



# பரிசுத்தஆவியாகிய தேவன்

இந்த மூன்றாம் வார செய்தியில் திரித்துவத்தில் மூன்றாம் நபராகிய பரிசுத்த ஆவியானவரை குறித்து வேத வசனத்தின் அடிப்படையில் நாம் கற்றுக்கொள்வோம். இது சமுத்திரத்தின் ஒரு துளியே. பரிசுத்த ஆவியானவரை குறித்து ஆதியாகமம் முதல் அதிகாரம் முதல் (ஆதி 1,2) வெளிப்படுத்தல் புத்தகத்தில் கடைசி அதிகாரம் வரை (வெளி 22:17) வாசிக்க முடிகிறது. வேதத்தில் முதல் பகுதியில் பழைய ஏற்பாட்டில் ஆவியானவர் குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட மனிதர்கள் மத்தியில் குறிப்பிட்ட வரையறையோடு இடைப்பட்டதாக பார்க்க முடிகிறது. இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தின மோசே மற்றும் யோசுவா மேலும் தலைவர்களாக நியமிக்கப்பட்ட 70 நபர்கள் இவர்கள் மத்தியில் ஆவியானவர் பலமாய் செயல்பட்டதாக உணர முடிகிறது (எண் 11, உபாகமம் 34). மேலும் அதை நியாதிபதிகளின் காலத்தில் சிம்சோன் மேல் பரிசுத்த ஆவியானவர் பலமாய் இறங்கினார் என்று பார்க்கிறோம்.

பின்பு ராஜாக்களின் காலத்தில் சவுல், தாவீது, சாலமோன் அபிஷேகத்திலும் (1 சாமு 10), தாவீதின் பாவ அறிக்கை ஜெபமாகிய சங் 51ன் படி உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாதேயும் என்ற வசனங்களின் மூலம் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகளை உணர முடிகிறது. ராஜ்ஜியம் பிரிந்த பின்பு தீர்க்கதரிசிகளின் காலங்களில் எலியாவின் சரித்திரத்திலும், பரிசுத்த ஆவியானவரின் நிறைவை காண முடிகிறது (1 ராஜா 18:45,46 ; 2 ராஜா 2:13-15). பின்பு யோவேலின் தீர்க்கதரிசனத்தின்படி மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்(யோவேல் 2:28-32) என்ற தீர்க்கதரிசன வார்த்தையோடு தொடரும் ஆவியானவரின் வல்லமையானது 800ஆண்டுகளுக்கு பிறகு மேல்வீட்டறையில் சீர்கள் கூடின பொழுது பெந்தேகோஸ்தே நாளான அன்று நிறைவேறினதாக காணமுடிகிறது. தொடர்ந்து புதிய ஏற்பாட்டில் அவருடைய சுவிசே ஊழியத்தின் பங்காக சபை கட்டுமானத்திலும், சபை வளர்ச்சியிலும் ஆவியானவரின் வல்லமை, ஆவியானவரின் வரங்கள், ஆவியின் கனிகள் என பேதுருவும், பவுலும் விளக்குவதை பார்க்க முடிகிறது. இந்த முதல் பகுதியை இரண்டு குறிப்புகளோடு நிறைவு செய்கிறோம். ஒன்று பரிசுத்த ஆவியானவர் கடவுள் இதை அப் 5:3-5 வசனங்களிலும் 2 கொரி 3:17ன் படி பவுல் விளக்குவதை நாம் எடுத்துக்கொள்ளலாம். இரண்டு பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவம்(Person) கொண்டவர். இதை பவுல் ரோமருக்கு எழுதும் பொழுது தெளிவாக குறிப்பிடுவதை பார்க்கலாம். ரோம 8:27; எபே 4:30; 1 கொரி 12:11 இந்த வசனங்களின் மூலம் அவர் ஒரு நபர் என்பதை புரிந்து கொள்ளலாம். தொடர்ந்து வரும் அடுத்த பகுதியில் ஆவியானவரை குறித்த அடுத்த பகுதியை கற்றுக்கொள்வோம்.

### வேதத்தில் ஆவியானவரை குறிக்கும் அடையாள சொற்கள்:

வேதத்தில் ஆவியானவரை குறிக்கும் அடையாள சொற்கள் 7 உள்ளது. அவைகளை தலைப்பின் கீழ் இருப்பிடங்களை தருகிறோம். எடுத்து வாசித்துக் கொள்ளவும்.

1. புறா (மத் 3:16; யோவா 1:32), 2. அபிஷேக தைலம் (யாத் 29:20,21; 1 யோவா 2:20) 3. காற்று (யோவா 3:8; அப் 2:2), 4. அக்கினி (ஏசாயா 4:4; அப் 2:3), 5. ஆடை (நியா 6:34; லூக் 24:49), 6. முத்திரை (யோவா 6:27; எபே 1:13; 4:30) 7. அச்சாரம்(Earnest) (2 கொரி 5:5; எபே 1:14). அடுத்தபடியாக ஆவியானவரின் பணிகளை குறித்து கற்றுக்கொள்வோம்.

### ஆவியானவரின் பணிகள்:

இங்கு ஆவியானவரின் பணிகளை குறித்து மூன்று நிலைகளில் சுருக்கமாக கற்றுக்கொள்வோம்.

### I. இரட்சிப்பில் ஆவியானவரின் பணி:

ஒரு மனிதன் பாவ வாழ்க்கையை விட்டு கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, உன்னத தெய்வத்திடம் ஐக்கியமாவதில் பரிசுத்த ஆவியானவரின் பங்கு இணையற்ற ஒன்று. இங்கு நம் உள்ளத்திற்குள் கண்டித்து உணர்த்துவதும். மறுபிறப்பு அடைய செய்வதும் ஆவியானவரின் பங்காக நாம் வாசிக்கிறோம். கண்டித்து உணர்த்துவதில் (யோவா 16:7-11) ஆரம்ப செயலும், பாவத்தை உணர்த்துவதிலும், பாவத்தை குறித்த குற்ற உணர்வை கொடுப்பதிலும், கிறிஸ்துவின் மன்னிப்பை குறித்த நம்பிக்கையை ஊட்டுவதிலும் கிறிஸ்து இயேசுவின் மேல் வாஞ்சையையும், ஆசையையும் கொடுப்பது ஆவியானவரின் பங்கு. இரட்சிப்பின் அடுத்த பகுதியாகிய மறுபடி பிறக்கும் அனுபவத்தில் (யோவா 3:3-7; 1 பேதுரு 1:23) கிறிஸ்துவின் மேலும், அவருடைய வார்த்தையின் மேலும் சார்ந்து வாழும் வாழ்க்கைக்கு இணைப்பு பரிசுத்த ஆவினானவரே. மேலும் ஒரு மனித வாழ்க்கைக்கு கிறிஸ்துவின் பங்கின் அவசியத்தை உணர வைத்து வழிநடத்துபவர் ஆவியானவரே.





**2. ஆவிக்குரிய வளர்ச்சியில் ஆவியானவரின் பங்கு:**

இங்கு மூன்று வார்த்தைகளில் ஆவிக்குரிய வளர்ச்சியில் ஆவியானவரின் பங்கை குறிப்பிடுகிறோம். 1. நம்முடைய பெலவீனங்களில் நமக்காக பரிந்து பேசுகிற ஆண்டவர் (ரோம 8:26-27), 2.நம்மை அபிஷேகிக்கிறவர் (1 யோவா 2:20), 3. கடைசியாக நம்மை நிரப்புகிறவர் (எபே 5:18) நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியிலும் அபிஷேகம் என்ற இரண்டாம் நிலையோடு நின்று விடாமல் நிரம்பின முழுவாழ்க்கைக்கு வளர உங்களை அழைக்கிறோம்.

**3. ஆவியானவரின் பங்கு இரட்சிப்பின் நிச்சயத்தில் தொடர:**

இதில் மூன்று பகுதிகள் அடங்கியுள்ளது.

1. நம்மை பிறரிடம் அவருக்கு சாட்சியாக நிறுத்துகிறார்(ரோம8:15-17). 2. நம்மை முத்தரித்து நம்மை அவருக்கு சொந்தமாக வைத்திருக்கிறார் (எபே 4:30), 3. கடைசியாக நமக்குள் வாழ்ந்து நமது சரீரத்தை அவருடைய ஆலயமாக்கியிருக்கிறார் (யோவா 14:15-17).

கடைசி பகுதியில் பரிசுத்த ஆவியானவரின் தன்மைகளை (Character) குறித்து கற்றுக்கொண்டு நிறைவு செய்வோம். பரிசுத்த ஆவியானவரின் தன்மைகளை கற்றுக்கொள்வது எவ்வளவு அவசியம் என்பதை அப் 19 முதல் மூன்று வசனங்களில் உணர முடிகிறது. இதில் சொல்லப்பட்ட ஒரு வார்த்தை நீங்கள் விசுவாசிகளான பொழுது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா? என்று பவுல் கேட்டான். அதற்கு அவர்கள் பரிசுத்த ஆவி உண்டுடென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள். இதில் குறிக்க வேண்டிய வார்த்தை விசுவாசிகளிடம் கேட்கப்பட்ட கேள்வி. அதிலும் குறிப்பாக முதல் வசனத்தின் கடைசிப்பகுதி சொல்லுகிறது, குறிப்பாக அவர்கள் சீர்கள். நம்மில் பலரும் இந்நிலையில் தான் தொடருகிறோம். தெய்வத்தை குறித்து வேதம் சொல்லும் காரியங்களை நாம் அவசியம் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த செய்தியில் மிக குறைந்த அளவே உங்களுக்கு கற்றுக்கொடுத்திருக்கிறோம். நீங்களாகவே தேவ ஒத்தாசையோடு ஜெபத்தில் தரித்திருந்து வேதத்தின் மூலம் நீங்கள் கற்றுக்கொள்ள உங்களை உற்சாகப்படுத்துகிறோம். இப்பொழுது ஆவியானவரின் தன்மைகளை இரண்டு தலைப்பின் கீழ் உங்களுக்கு விவரிக்கிறோம். ஒன்று ஆவியானவரை குறித்த உண்மைகள் (reallity) இதில் இரண்டு முக்கிய குறிப்புகளை கற்றுக்கொண்டு அடுத்த பகுதிக்கு செல்லலாம். ஒன்று பரிசுத்த ஆவியானவர் நித்திய வல்லமையுடைய கடவுள், திரித்துவ கடவுளின் ஒரு நபர், இவர் எல்லாம் செய்ய வல்லவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிந்தவர், அன்பு மிகுந்த ஞானமுள்ள தூய ஆவியானவர், கடவுள் (அப் 5:3-4; எபே 2:21-22), பிதாவோடும் குமாரனோடும் ஐக்கியமுள்ளவர் (எபே 3:14-16; மத் 28:19). இவருடைய செயல்கள் கடவுளின் செயல்களாக மத் 1:20ல் வாசிக்கிறோம். இரண்டாவது குறிப்பாக நம்மில் அநேகர் புரிந்து கொண்டவண்ணமாக ஏதோ ஒரு வல்லமை(Force), நம்மை ஆட்கொள்ளும் ஒரு சக்தியோ(influence) அல்ல, மாறாக முதல் பகுதியில் குறிப்பிட்ட வண்ணமாக ஆள்தத்துவம் கொண்ட நபர். அவரால் தேர்வு செய்ய முடியும் (1 கொரி 12:7-9, 11). மேலும் அவர் அக்கறை காட்டும் நபர். உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் உள்ளடக்கியவர் (ரோம 15:30; எபே 4:30). அவரால் கட்டளையிட முடியும் (அப் 16:6,7), அவரால் புரிந்து கொள்ள முடியும் (மத் 4:1; கலா 5:18), அவரால் மனிதர்களோடு வார்த்தையின் மூலம் தொடர்பு கொள்ள முடியும் (அப் 13:2; 10:19; 8:29), எல்லாவற்றிற்கும் மேலாக நம்மோடு உறவு வைத்து நம்மை கண்காணிக்க முடியும் (அப் 13:3, 20:28). பரிசுத்த ஆவியானவரின் தன்மைகளின் இரண்டாவது ஆவியானவரை குறித்த சத்தியங்கள் (Response) பரிசுத்த ஆவியானவர் கடவுளின் நீதி (ரோமர் 10:3) மேலும் வரும் கால இஸ்ரவேலரை புரிந்து கொள்ள (ரோமர் 11:25), வரங்களை உடையவர் (1 கொரி 12:1), விசுவாசிகளின் இலக்கு(1 தெசலோ 4:13), எல்லாவற்றிற்கும் மேலாக உண்மையான அர்த்தமுள்ள ஒரு வாழ்வை கொடுக்கவும் மெய் சந்தோத்தை மனிதன் அனுபவிக்கவும், தேவ சமாதானத்தை அடையவும் நம்மில் கிரியை செய்கிற தெய்வமாக இருக்கிறார்.

அன்பு தம்பி, தங்கையே இந்த செய்தியின் துவக்கத்தில் சொன்னவண்ணமாக ஆவியானவரை குறித்து சமுத்திரமளவு கற்றுக் கொள்ள வேண்டிய காரியமாய் இருந்தாலும் ஒருதுளி அளவை இதில் விளக்கியுள்ளோம். அநேக வேத வசனங்களை உங்களுக்கு மேற்கொள் காட்ட முடியும். ஆனால் ஒரு சில வசனங்களை மட்டும் எடுத்துக்காட்டாக அடைப்பு குறிப்பில் கொடுத்துள்ளோம். சில வசனங்கள் நேரடியாகவும், ஒரு சில வசனங்கள் உள்அர்த்தம் கொண்ட மறைமுகமாகவும் உள்ளது. செய்தியை வாசிக்கும் போதே வேத வசனங்களையும் எடுத்து வாசிக்க அன்போடு கேட்கிறோம். இந்த ஆவியானவர் உங்கள் உள்உணர்வோடு, அன்போடு அழைக்கும் பொழுது அவர் உங்களில் வந்து வாசம் செய்வார். இவரை கண்ணீரோடு அழைக்க தேவையில்லை. அவர் உள்ளே வந்தால், நீ கண்ணீர் விட்டு அறிக்கை செய்து ஆண்டவரோடு ஒப்புரவாவாய். மேலும் இந்த பரிசுத்த ஆவியானவரின் வல்லமை ஒரு பாடல் வேளைக்குள்ளோ, ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு உட்பட்டவைகளோ அல்ல. குறிப்பாக பரிசுத்த ஆவியானவர் ஆராதனை வேளைக்கு மட்டுமோ அல்லது ஞாயிற்றுக்கிழமைகளுக்கு மட்டுமோ உரியவர் அல்ல. இந்த பரிசுத்த ஆவியானவர் உன்னில் வாசம் செய்யும் பொழுது ஈடு செய்ய முடியாத சந்தோஷத்தையும், தெய்வீக சமாதானத்தையும் நாள் முழுவதும் அதை தொடர்ந்த வாழ்நாள் முழுவதும் அனுபவிக்க முடியும். பரிசுத்த ஆவியனவரே என் உள்ளில் வாரும் ஆமென், ஆமென்.

- Selva

# நவீனகால விக்கிரகம்

ஒரு தேசத்தின் இளவரசர்களாகிய 4 சகோதரர்கள் ஏதாவது ஒருதுறையில் சிறந்து விளங்க ஆசைபட்டனர். சில நாட்களுக்குப் பின்பு அவர்களில் ஒருவன் என்னால் ஒரு எலும்பு கூட்டுக்கு சதை கொடுக்க முடியும் என்றான். மற்றொருவன் அவனைப் பார்த்து உன்னால் சதை கொடுக்க முடியுமானால் அதற்கு மேல் தோலைக் கொடுக்க என்னால் முடியும் என்றான். மூன்றாம் நபர் என்னால் அவைகளுக்கு கை, கால் போன்ற உறுப்புகளை உருவாக்க முடியும் என்றான். நான்காம் நபர் அவைகளுக்கு என்னால் உயிர் கொடுக்க முடியும் என்றான். நான்கு பேரும் காட்டிற்குள் சென்று ஒரு எலும்பு கூட்டை கண்டு, தாங்கள் கற்றறிருந்தபடி தங்கள் திறமையை வெளிக்கொண்டுவர முயற்சித்தனர். ஒருவன் அந்த எலும்புக்கூட்டிற்கு சதையும், மற்றொருவன் தோலும், முடியும் கொடுத்தான். மற்றொருவன் அவற்றிற்கு கை, கால்களை வர வைத்தான். நான்காம் நபர் அவற்றிற்கு உயிர் கொடுத்தான். அது ஒரு சிங்கத்தின் எலும்புகூடாக இருந்ததால், அது சிங்கமாக உயிர்பெற்று, பின் அவர்கள் நான்கு பேரையும் கொன்று அதற்கு இரையாக மாற்றியது.

யாத்.20:3 விக்கிரக ஆராதனை என்பது வேதத்திற்கு புறம்பானது என்று அறிவுறுத்துகிறது. ஆனால் இ ன்று விக்கிரக ஆராதனை என்பது புதிய ரூபத்தில் ஆரோனின் கன்றுகுட்டிபோல் எழுந்துள்ளது. அவை தேவ அன்பிற்கும், நம்பிக்கைக்கும், கீழ்ப்படிதலுக்கும் விரோதம
ாக உள்ளது. நாம் சிலைகளுக்கும், அந்நிய விக்கிரகங்களுக்கும் முன்பு பணியாவிட்டாலும், நாம் வைத்திருக்கும் பணம்,பதவி, பொருட்களை சில நேரங்களில் ஆராதிக்கிறவர்களாக மாறி விடுகிறோம். இப்படிப்பட்ட நவீன கால விக்கிரக ஆராதனைகளில் சுயம் என்பதே தலைதூக்கி நிற்கிறது. நமது கரங்களில் உள்ள நவீன கால கருவிகளாகிய டி.வி, மொபைல், கம்ப்யூட்டர் போன்றவற்றை தவறாக பயன்படுத்தப்படும் போது நம்மை அவற்றிற்கு அடிமைகளாக மாற்றி விடுகின்றன. அதுபோல நாம் உபயோகிக்கும் செல்போன், ஐ பேட், கம்ப்யூட்டர் போன்றவையும் நம்மை அடிமைப்படுத்துகின்றன. அநேக நேரங்களில் இப்படிப்பட்ட நவீன கருவிகள் இல்லாமல் வாழ்வது என்பது நமக்கு கடினமாக தோன்றுகிறது.

## அப்படியா!

சீனாவில் இளம் வாலிபன் ஐ பேட் வாங்குவதற்காக தனது கிட்னியையே விற்றது உலகத்தை உலுக்கிய சம்பவம். உலகத்தில் 2/3 பங்கு மக்கள் தங்களது செல்போனில் அழைப்பு மற்றும் எஸ்.எம்.எஸ். வராமலே அவர்களின் செல்போனை செக் பண்ணிக் கொள்கிறார்கள். குறிப்பாக, ஸ்மார்ட் போன் பயன்படுத்துபவர்கள் 6 நிமிடத்திற்கு ஒருமுறை (52 முறை) தங்களது போனை செக் பண்ணிக் கொள்கின்றனர் என ஒரு ஆய்வுக்குழு கண்டுபிடித்துள்ளது. 52%பேர் தங்களது Face Book & E-mailஐ இரகசியமாக, தனியாக தங்களது பாத்ரூமில் போய் பார்த்துக் கொள்கிறார்கள். இவை அனைத்தும் நவீன கால விக்கிரக ஆராதனை என்னும் புதிய கலாச்சாரத்துக்குள் நம் இளைஞர்களை இழுத்துச் செல்கிறது என்பதை உணர்த்துகிறது.

## அப்படினா என்னாகும்?

மருத்துவ ஆராய்ச்சிப்படி இந்த நிலைமை தொடர்ந்தால், இவர்களின் நிலை முரட்டாட்டமான வாழ்வாகவும், சுபாவமாகவும் மாறும். இன்னும் சில அறிகுறிகளான தூக்கமின்மை, மனஉளைச்சல் மற்றும் தனிமை உணர்வு போன்றவை நமது வாலிபர்களை அழித்துக் கொண்டு இருக்கின்றன. இவைகளை காட்டிலும் கொடூரமான சேதம் என்னவென்றால், நமது தேவனாகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும் விட்டு விட்டு இவைகளை ஆராதிக்கிறவர்களாக மாறி விடுவோம்.

## கவனிக்க!

நவீன கால கருவிகளுக்கு நாம் அடிமைகளா? இல்லையா? என்பதை எப்படி அறிந்து கொள்ளலாம். தொடர்ந்து 48 மணி நேரம் நமது செல்போனையோ அல்லது இணையதளத்தையோ பார்க்காமல் இருக்க முடியுமானால் நாம் அவைகளை ஆள்கிறோம் என்று பொருள். செல்போனை இரகசிய எண்களினால் மூடி மறைப்பதோ அல்லது போனில் மாற்று பெயர்களில் எண்களை பதிவு செய்து வைத்திருப்பதோ நீ அதைத் தவறாக பயன்படுத்தி பாவம் செய்கிறாய் என்று காட்டுகிறது.எப்பொழுதும் உன் பெற்றோருக்கு உனது password மற்றும் இரகசிய எண்களை கொடுக்கும்போது நீ தவறு செய்யவில்லை. தேவனோடு உன் உறவு நல்ல முறையில் இருப்பதற்கு இதுவே அறிகுறி.

## தப்பிக்க!

இப்படிப்பட்ட நவீன கால விக்கிரக ஆராதனையிலிருந்து தப்பிப்பது எப்படி?

நாம் தேவனை மட்டுமே ஆராதிக்க தேவன் நம்மை உண்டாக்கினார். எனவே நாம் இரண்டு எஜமானுக்கு ஊழியம் செய்ய கூடாது என வேதம் அறிவுறுத்துகிறது. நாம் அதிகாலையில் அவர் சமூகத்தை நாட வேண்டும். அப்படியானால் தேவ தூதர்களோடு நாம் ஆராதிக்க சிறந்த நேரம் அதிகாலை 3மணி முதல் 6 மணி வரை ஆகும். ஒவ்வொரு நாளையும் தேவனோடு கொண்டாடி ஆரம்பிக்க வேண்டும். அனுதினமும் அவர் சமூகத்தில் வரும்போது அவருடைய வார்த்தை நம் மேல் கிரியை செய்ய விட்டு கொடுக்க வேண்டும்.
உணவில்லாமல் தேவனோடு உபவாசம் என்பதையும், அத்துடன் நவீன கால விக்கிரகமில்லாமல் இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். உன் தேவனாகிய கர்த்தரை முழு மனதோடு, முழு பெலத்தோடு, முழு ஆத்துமாவோடு தொழுதுகொள்வதையே விரும்புகிறார் (மத்.22:37).

## கடைசியாக:

ஆரம்பத்தில் வாசித்த கதையைப் போல, நாம் உருவாக்கும் அநேக காரியங்கள் நம்மை அழித்துவிட கூடியவைகளாக மாறலாம். ஆகவே உருவாக்க அறிந்தவர்கள் அவற்றை எங்கு நிறுத்த வேண்டும் என்பதையும், அதை கட்டுப்படுத்தவும் அறிந்திருந்தால் ஆபத்தில் முடியாது. அவர்களைப்போல் முதல் நிலையில் நிறுத்தியிருக்கலாம் அல்லது இரண்டாம், மூன்றாம் நிலையில் நிறுத்தியிருக்கலாம். சிலையே என அறிந்தும் அதற்கு உயிர் கொடுத்து தன் வாழ்வை அழித்தனர். நாம் அன்றாடம் பயன்படுத்தும் மற்றும் சமூக வலைதளங்களை எங்கு switch off மற்றும் switch on பண்ண வேண்டும் என்னும் அளவிற்கு நீ அவைகளை ஆள கற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அது உன்னை காலபோக்கில் மெதுவாக கொன்றுவிடும். நம்மை படைத்த தேவனுக்கு கொடுக்க வேண்டிய கனத்தையும், நேரத்தையும் கொடுக்க தவறினால் அதுவே மற்றொரு விக்கிரக ஆராதனையாக மாறி விடும். இன்றைய விக்கிரகங்கள் shelfல் இல்லை, selfல் தான் உள்ளன. எனவே நமது சுய ஆசை, இச்சைகளை சிலுவையில் அறைந்து வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து காண்பிப்போம். உங்கள் கரங்களில் கொடுக்கப்பட்ட எதுவானாலும் சரி, அது ஆரோனின் கன்றுக்குட்டியாக



–வினோத் சாலமோன்

# ஆவிக்குரிய தலைமைத்துவமும், வீழ்ச்சியும்

தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்
– 1கொரி.10:12

தலைமைத்துவத்தைப் பெற விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட குணாதிசயங்களை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டுமென்று வேதம் வலியுறுத்துகிறது.




## ஆவிக்குரிய தலைவர்கள்...

1. குற்றமற்றவர்களாக,
2. குடும்பத்தை விசாரிக்கிறவர்களாக,
3. நற்சாட்சி பெற்றவர்களாக, ஒழுக்கம் உடையவர்களாக,
4. நற்பண்புகளைக் கொண்ட வர்களாககாணப்படுதல் மிகவும் அவசியம்.

தேவனுடைய திருவுளச் சித்தத்தின்படி தலைமைத்துவத்தைப் பெற்ற பின்பு, தேவனைச் சாராது தன்னிச்சையாக வாழ்ந்து, வீழ்ச்சி காணும்போது, தேவன் நம்மை தெரிந்தெடுத்ததின் நோக்கத்தையும், நாம் பெற்றுக் கொள்ள வேண்டிய உன்னதமான சுதந்தரத்தையும், ஆசீர்வாதங்களையும் இழந்து விடுகிறோம். இப்படி வீழ்ந்து போன அநேகரை வேதத்திலே நாம் காண்கிறோம். அவர்களின் சரிதைகள் நமக்கு எச்சரிப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

## வீழ்ச்சியின் நிலைகள்

1. மாம்ச ரீதியான சிந்தனைகள், இச்சைகள், பாவங்கள், பொருளாசைகள்
2. மேட்டிமை, சுயநலம், தன்பலம் சார்தல், புகழ்ச்சி நாடுதல்
3. அவிசுவாசம், அதிருப்தி, சந்தேகம்
4. பொறுமையின்மை, சுயபுத்தி, உலக வழக்கத்தின்படி வாழ முற்படுதல்



## வீழ்ச்சிக்கான காரணங்கள்

ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் வீழ்ந்து போவதற்கு பல காரணங்கள் இருந்தாலும், கீழ்க்கண்டவைகள் முக்கியமானதாக அறியப்படுகின்றன.

1. தேவனோடுள்ள உறவிலே தொய்வு
2. வேதத்தை நேசிப்பதிலே சோர்வு
3. ஜெபிப்பதிலே நாட்டமின்மை,தேவ ஜனங்களோடு ஐக்கியமின்மை
4. கற்றுக் கொள்ள ஆர்வமின்மை...

**வீழ்ச்சியினால் ஏற்படும் விளைவுகள்:**

தேவனால் தலைமைத்துவத்திற்கு தெரிந்தெடுக்கப்படும் மனிதர்கள் தவறும்போது ஆண்டவர் பல நிலைகளில் அவர்களை சிட்சிக்கிறார், தண்டிக்கிறார், சீர்ப்படுத்துகிறார். ஆனால், ஆவிக்குரிய தலைவர்கள் நிரந்தரமாய் வீழ்ச்சி காணும்போது அதிக கேடுகளை தங்களுக்கும், பிற மனிதர்களுக்கும், தேவனுடைய நாமத்திற்கும் வருவித்துக் கொள்கிறார்கள்.

| தலைமைத்துவத்திற்கு தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் | தவறுகள் | விளைவுகள் |
|---|---|---|
| மோசே, ஆரோன் - எண்.20ம் அதிகாரம் | கீழ்ப்படியாமை, அவிசுவாசம் | தலைமைத்துவம் மாற்றப்படுகிறது. கானான் பிரவேசம் தடுக்கப்படுகிறது. |
| ஒப்னி, பினெகாஸ்- 1 சாமு.2ம் அதிகாரம் | பொருளாசை, மாம்ச இச்சை | ஆசாரியத்துவம் மாற்றப்படுகிறது. வம்சம் தண்டனைக்குள்ளாகிறது. |
| சிம்சோன் - நியாய.13-16 அதிகாரங்கள் | கீழ்ப்படியாமை | தேவ திட்டத்தை இழத்தல், அவமானப்படுதல் |
| தாவீது - 2 சாமு.12:10 | மாம்ச இச்சை, அதிகார துஷ்பிரயோகம் | தண்டிக்கப்படுதல் |
| சாலமோன் - 1 இராஜா.11:9-11 | தேவனை விட்டு விலகுதல் | இராஜ்ஜியம் உடைந்து தேவ ஜனங்களுடைய ஐக்கியம், ஒற்றுமை பிளவுபடுதல் |
| யூதாஸ் காரியோத்து - மத்.26:46-49; மத்.27:4,5 | பொருளாசை, காட்டிக் கொடுத்தல் | கைவிடப்படுதல், அவப்பெயர் |
| தியோத்திரேப்பு - 3 யோவான் | புகழ்ச்சி நாடுதல் | தேவப் பணிக்கு இடையூறு ஏற்படுத்துவதால் கண்டனம் |

ஒரு ஆவிக்குரிய தலைவன் / தலைவி வீழ்ச்சி காணும்போது தனக்கும், தன் குடும்பத்திற்கும் கேடு விளைவிப்பதோடு தேவனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றாது போவதினால் அநேக ஜனங்களும், தேவப்பணியும் பாதிக்கப்படும் நிலை ஏற்படுகிறது. அத்தோடு தேவ நாமம் மகிமைப்படுவதற்கு பதிலாக தூஷிக்கப்படுகிறது.

எனவே ஆவிக்குரிய தலைமைத்துவம் பெற்றுள்ளவர்கள் நிதானத்தோடும், நேர்மையோடும் தேவனையே சார்ந்து வாழ்வதும், அவர் சித்தத்தை அறிந்து அதன்படி வாழ்ந்து செயல்படுவதும் மிகவும் அவசியம்.

- Daniel David

# தேவ தூதர்கள்



இந்த நான்காம் வார செய்தியில் மூல உபதேசத்தில் இடம் பெற்றுள்ள தூதர்களை குறித்து வேத வசனங்களின் ஆதாரங்களோடு கற்று தெளிவுடன் இருப்பது நல்லது. ஏனென்றால் தூதர்களை குறித்து யோசிக்கும் போழுதோ அல்லது பேசும் பொழுதோ அவரவர் சிந்தைக்கு வருவதை அல்லது வாய்மொழியாக பிறர் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளுவது வழக்கம். நாளடைவில் தவறான கருத்துக்களையும் உள்வாங்கி கொள்ளுகிறோம். தூதர்கள் இப்பிரபஞ்சத்தின் சிருஷ்டிப்புகளா? அல்லது உலகம் உண்டவதற்கு முன்பே இருக்கிறார்களா? என்ற கேள்விகள் நமக்கு உண்டு. இஸ்லாமியத்திலும் தூதர்களை குறித்த கருத்து ஒன்று உண்டு. அது என்னவென்றால் ஒவ்வொரு நபருக்கும் இரண்டு தூதர்கள் உண்டு என்றும் அதில் வலதுபக்கம் உள்ள தூதன் அந்த நபரின் நல்ல காரியங்களை பதிவு செய்கிறவன் என்றும், இடபக்கம் உள்ள தூதன் அந்த நபரின் தீய காரியங்களை பதிவு செய்கிறவன் என்றும் நம்பிக்கை இருக்கிறது. எபிரேய கலாச்சாரத்திலும் தூதர்களை குறித்த நம்பிக்கை இருக்கிறது. இவர்கள் தூதர்களை நான்கு பிரிவாக பிரித்து வைத்திருக்கின்றனர். அதில் முதல் தூதன் காபிரியேல் இவன் கடவுளின் இரகசியத்தை மனிதனுக்கு சொல்லுபவன். இரண்டாம் தூதன் மீகாவேல் இவன் கடவுளுடைய எதிரிகளை எதிர்த்து போரிடுகிறவன். மூன்றாவது தூதன் ரபேல் இவன் இறந்தவர்களின் ஆவியை பெறுபவன். நான்காவது உரியேல் இவன் ஒவ்வொருவரையும் நியாயந்தீர்க்கிறவன் என்ற கருத்துக்கள் உண்டு. ஆனால் நாம் இந்த செய்தியின் மூலம் பரிசுத்த வேதாகமத்தில் தூதர்களை குறித்த காரியங்கள் என்னவென்பதை படிக்க முயற்சிப்போம். தொடர்ந்து வரும் நாட்களில் வேதவசனங்களின் அடிப்படையில் நீங்கள் அதிகம் கற்றுக்கொள்ள உங்களை உற்சாகமூட்டுகிறோம். ஏனென்றால் இது நமது மூல உபதேசத்தில் ஒன்று. வேதத்தில் 34 புத்தகத்தில் யூதர்களை குறித்து எழுதப்பட்டிருக்கிறது. மொத்தம் 273 தடவை அதாவது பழைய ஏற்பாட்டில் 108 முறையும், புதிய ஏற்பாட்டில் 165 முறையும் தூதர்களின் தன்மை செயல்பாடுகள் மனிதரோடும் கடவுளோடும் உள்ள பங்கு இவைகளை பற்றி விவரிக்கிறது. இந்த செய்தியிலும் அடிப்படை தலைப்புகளின் கீழ் சுருக்கமாக நாம் கற்றுக்கொள்வோம். அதற்கு முன்பதாக கீழே கொடுக்கப்பட்டுள்ள நான்கு வசனங்களை வாசிக்கலாம்.

தேவனுடைய இரதங்கள் பதினாயிரங்களும், ஆயிரமாயிரங்களுமாயிருக்கிறது;
ஆண்டவர் பரிசுத்த ஸ்தலமான சீனாயிலிருந்தவண்ணமாய்
அவைகளுக்குள் இருக்கிறார். (சங் 68:17).

தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை
அக்கினிஜுவாலைகளாகவும் செய்கிறார் (104:4).

அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்;
அவருடைய சேனைகளே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் (148:2).

நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய
பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான
தேவதூதர்களினிடத்திற்கும், (எபி 12:22).

### வேதத்தில் தூதர்களை குறித்த சொற்கள்:

வேதத்தில் 8 வெவ்வேறு தலைப்பின் கீழ் தூதர்கள உருவகப்படுத்தப்படுகின்றனர். 1. பணிவிடையாளர்கள் (சங் 103:20-21 ; 104:4) இவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் தங்களை ஈடுபடுத்துவதாக கூறிப்பிடப்படுகிறது. 2. விருந்தாளி (Host) (ஆதியா 32:1,2; யோசுவா 5:14; 1 சாமுவேல் 17:45) 3. இரதங்கள் (2 இராஜா 6:16-17; சங் 68:17; சகரி 6:5) இது அதன் வேகத்தோடும் ஒப்பிடப்பட்டிருக்கும். 4. கண்காணிப்பாளர்கள் (தானி 4:13,17) 5. பலவான்களின் புத்திரர்கள் (சங் 29:1; 89:6) 6. தேவபுத்திரர்கள் (ஆதி 6:2,4; யோபு 1:6; 2:1) 7. பரிசுத்தவான்கள் (சங் 89:7; தானி 8:13; சகரி 14:5) 8. நட்சத்திரங்கள் (யோபு 38:7; சங் 148:2; வெளி 12:3,4) இது எண்ணிக்கையின் அடிப்படையிலும், பிரகாசத்தின் அடிப்படையிலும் குறிக்கப்பட்டிருக்கும்.

## தூதர்களின் தன்மைகள்:

தூதர்கள் கண்ணுக்குப் புலப்படாதவர்கள் (ரோமர் 1:18-32; கொலே 2:18; வெளி 19:10) மேலும் தூதர்கள் கணக்கிலடங்காதவர்கள் அல்லது எண்ணமுடியாதவர்கள் (யோபு 28:7; வெளி 9:1,2; 12:3,4) மேலும் எபிரேயர் ஆக்கியோன் (எபி 1:7,14) ஆவியின் தன்மையுடையவர்கள் என்று சொல்லுகிறார். இவர்களை குறித்து மேலும் வேதத்தில் படிக்கும் பொழுது ஒவ்வொரு தனிப்பட்ட ஆளுமை தன்மை கொண்டவர்கள் என்று பார்க்கிறோம். இதில் அவர்களின் அறிவார்ந்த தன்மை (தானி 9:21,22; 10:14), அவர்களின் சித்தம் (ஏசாயா 14:12-15; யூதா 6) இவர்களுக்கென்று மகிழ்ச்சியை வெளிக்காட்டக்கூடிய மற்றும் விருப்பத்தை வெளிக்காட்டக்கூடிய உணர்வுகளும் இருந்தது (யோபு 38:7; 1 பேதுரு 1:12). மனிதர்களோடு ஒப்பிடும் பொழுது



இவர்கள் பலவான்கள் (2 தெசலோ 1:7; 2பேதுரு 2:11). மனிதர்களை விட அதிவேகமானவர்கள் (தானி 9:21; வெளி 14:6) மேலும் மனிதர்களை விட திறமையானவர்கள் (தானி 10:14) இருப்பினும் கடவுளை விட குறைவானவர்கள் இவர்கள் எங்கும் நிறைந்தவர்கள் அல்ல (தானி 10:12). இவர்கள் எல்லா வல்லமை உடையவர்களும் அல்ல (தானி 10:13). இவர்கள் எல்லாம் அறிந்தவர்களும் அல்ல (மத் 24:36).

## தூதர்களின் சேவை மற்றும் பணிகள்:

தூதர்களின் சேவை மற்றும் பணிகளை இரண்டு பெரும்பிரிவுகளாக பிரிக்கலாம். அவைகளில் ஒன்று பரலோகத்தில் அவர்களின் பணி, மற்றொன்று பூலோகத்தில் அவர்களின் பணி. முதலாவதாக பரலோகத்தின் பணிகை குறித்து ஒரு சில பணிகளுக்கான வசனங்களை வாசிப்போம். அவர்கள் தேவனை ஆராதிக்கிறவர்கள்(1 இராஜா 22:19; ஏசா 6:3) மேலும் கடவுளின் பிள்ளைகளை உற்றுநோக்குபவர்கள் (லூக் 12:8,9; 15:10; எபே 3:10; 1 பேதுரு 1:12) மேலும் கடவுளின் தீர்க்கதரிசன திட்டத்தை குறித்து விசாரிப்பவர்கள் (தானி 12:5,6). எல்லாவற்றிற்கும் மேலாக கடவுளின் பணிகளில் மகிழ்ச்சி பொங்க ஆரவாரம் செய்பவர்கள். எடுத்துக்காட்டாக சொல்ல வேண்டுமென்றால் சிருஷ்டிப்பில் (யோபு 38:7), இரட்சிப்பின் பணியில் (1 தீமோ 3:16; வெளி 5:11-12), கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுவதில் (ஆதி 28:12; தானி 7:10) கடைசியாக கடவுளின் கோபத்தில் சாட்சியாக இருத்தல் (வெளி 14:10), தொடர்ந்து வரும் பகுதியில் பூலோகத்தில் தூதனின் பணியை நாம் புரிந்து கொள்வோம். பூலோக பணிகளில் இரட்சிக்கப்பட்டோருக்கான பணி, இரட்சிக்கப்படாதோருக்கான பணி, இஸ்ரவேர்களுக்கான பணி பூலோகத்தில் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தோடு சேர்ந்தப்பணி என நான்கு கோணங்களில் கற்றுக்கொள்ளுவது அவசியம். மீட்கப்பட்ட மக்களுக்கான பணியில் செய்திகளை கொண்டு செல்லவோ, இடைபடவோ, அறிவுறுத்தவோ பயன்பட்டதாக நாம் பார்க்கிறோம். இதில் தானியேல், சகரியா, மரியாள், யோசேப்பு, மேய்ப்பர்கள் என விரிவடைகிறது. மேலும் அப்போஸ்தலர்கள், பிலிப்பு (அப் 8:26), கொர்நேலியு (அப் 10), யோவான் (வெளி 17) இவர்கள் மீட்கப்பட்ட கூட்டத்தை பாதுகாக்கிறார்கள் (சங் 91:11). அவர்களை ஆற்றி தேற்றுகிறார்கள் (1 இராஜா 19:5), அவர்களை விடுவிக்கிறார்கள் (அப் 5:19; 12:7) அதி முக்கியமாக மீட்கப்பட்டவர்களின் மரண நேரத்தில் அவர்களுக்கு பணிவிடை செய்கிறார்கள் (லூக் 16:22). மீட்கப்படாத கூட்டத்திற்கு நியாயந்தீர்க்கும் பணியில் அவருடைய பங்கை எகிப்தியர்களுக்கு (யாத் 12), சோதோம் கொமாரா (ஆதி 19), அசீரியர்கள் (2 இராஜா 19), மேலும் ஏரோது ராஜா (அப் 12).இஸ்ரவேர்களுக்கான பணியில் இஸ்ரவேலுக்காக போரிட்டவர்கள் (நியா 5:20), அவரை முத்திரையிட்டவர்கள்(வெளி 7). அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தை கொடுத்தவர்கள் (எண் 33:2; கலா 3:19; எபி 2:2).எல்லாவற்றிற்கும் மேலாக மத் 24:31ன் படி அவர்களை கூட்டிச்சேர்க்கும் பணியில் ஈடுபடுவார்கள்.

பூலோகத்தில் இயேசு கிறிஸ்துவின் பணிக்கு தூதர்களின் பங்கு என்று பார்க்கும் பொழுது தேவதூதர்கள் அவரை ஆராதித்தார்கள் என்று பார்க்கிறோம் (எபி 1:6). மேலும் தூதர்கள் அவரால் அவருக்கென்று படைக்கப்பட்டவர்கள் என்று கொலோ 1:17ல் வாசிக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக அவரின் பிறப்பை முன்அறிவித்தவர்கள் (மத் 1:20,21) மற்றும் அவர் பிறந்த பிறகு அவர் பிறப்பின் நற்செய்தியை கூறி அறிவித்தவர்கள் (லூக் 2:9-13). அவருக்கு உதவி செய்தார்கள் என்று சங்கீதக்காரன் சங்கீதத்தில் சொல்லுவதையும், மத் 2:13ல் வாசிக்கிறோம். மேலும் உபவாசம் இருந்த பின்பு வனாந்திரத்திலே அவருக்கு பணிவிடை செய்ததாக மத் 4லிலும், கெத்சமனே தோட்டத்தில அவருக்கு பணிவிடை செய்ததாக லூக் 22லும் நாம் வாசிக்கலாம். உயிர்தெழுதலின் போது கல்லறையின் கல்லை புரட்டிப்போட்டதாக மத் 28:2ல் வாசிக்கிறோம். தொடர்ந்து அவருடைய உயிர்த்தெழுதலை அறிவித்ததும் தூதர்களின் பங்காக இருந்தது மத் 28:6. மேலும் அவரின் இரண்டாம் வருகையை முன்னறிவித்தவர்கள் அப் 1:10 வாசிக்கிறோம். கடைசியாக அவரது இரண்டாம் வருகையில் இயேசுகிறிஸ்துவோடு அவர்கள் வருவார்கள் என்றும் பவுல் தெசலோனிக்கேய சபைக்கு எழுதும் பொழுது எழுதுகிறார் (2தெசலோ 1:7-8). மொத்தத்தில் நாம் சொல்ல வேண்டுமென்றால் தூதர்கள் அவருக்கு பணிந்து பணிவிடை செய்தார்கள் (1 பேதுரு 3:22). ஆக நான்கு கோணத்திலே இந்த பூவுலகில் தூதர்களின் பங்கை நாம் படித்திருக்கிறோம். தொடர்ந்து கடைசி பகுதியாக தூதர்களை குறித்து இந்த கடைசி பகுதியில் நித்தியத்தில் அவர்களின் பங்கை குறித்து வாசித்து நாம் நிறைவு செய்கிறோம். தூதர்கள் புதிய எருசலேமை தெரிந்து கொள்ளப்பட்ட மக்களோடு அவர்களும் இருப்பார்கள் என்று நாம் புரிந்து கொள்ள முடிகிறது (எபி 12:22,23; வெளி 22:10-12) மேலும் கடவுளின் கிருபையை உணர்ந்தவர்களாக நித்தியத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோடு அவர்களும் நீடூழி காலமாக இருப்பார்கள் என்று நாம் புரிந்து கொள்ள முடிகிறது (எபே 2:4-7; 3:10,11). வசனங்கள் மூலமாக நித்தியத்திலும் பங்கு உண்டு என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

அன்பு தம்பி, தங்கையே மூல உபதேசங்களை ஒவ்வொன்றாக நாம் கற்று வருகின்ற இந்த வேளையிலேயே இந்த மாதம் திரித்துவத்தையும், தூதர்களையும் குறித்து நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம். தூதர்களை குறித்த வியத்திலே ஒருசில காரியங்களை நாம் வேத வெளிச்சத்திலே நாம் படித்திருக்கிறோம். தூதர்களுக்கும், மனிதர்களுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை பார்க்கும் பொழுது தூதர்களை காட்டிலும் மனுஷன் விசேஷித்தவன் என்று கூட சொல்ல முடியும். ஏனென்றால் தூதர்களுக்கு கிடைக்காத ஒரு சந்தோஷம், சமாதானம் மனிதனுக்கு உண்டு. அது என்னவென்றால் இரட்சிப்பின் சந்தோஷம் சமாதானமே. இந்த சந்தோஷமும், சமாதானமும் தூதர்களுக்கு கிடையாது ஏனென்றால் அவர்கள் பாவம் செய்யவில்லை. இந்த கோணத்திலே பார்க்கும் பொழுது கிறிஸ்து நமக்காக இரத்தம் சிந்தி சம்பாதித்த சந்தோஷத்தையும், சமாதானத்தையும் உணரும் பெரும்பாக்கியம் பெற்றவர்கள். உனக்காக அவர் தமது தூதர்களை அனுப்பி சகாயம் செய்ய வல்லவர். அவருடைய நாமத்திலே நாம் தொடர்ந்து பயணிப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென். - Selva

ஜெபித்தது போதும் என்ற கட்டுரையின் இரண்டாம் பாகத்திற்கு உங்களை அன்புடன் அழைக்கிறோம். நமது ஜெபங்களெல்லாம் என்னவாயின? நமக்குத் தெரிந்த ஒருவர் கொரோனா நோய்த் தொற்றினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்றொரு ஜெப வேண்டுகோள் முதலில் வருகிறது. அடுத்த சில நாட்களில் அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி வருகிறது. விசுவாசிகளோ, அவிசுவாசிகளோ முழுநேர ஊழியரோ, பகுதி நேரப் பணியாளரோ, ஏறெடுக்கப்பட்ட ஜெபங்களுக்கு வரும் பதில்களில் பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. தொலைக்காட்சி அல்லது Zoom-செயலி வாயிலாகப் பிரசங்கிமாரும், திருச்சபைகளும், மினெரி இயக்கங்களும் ஏராளம் ஜெபங்கள் நடத்துகின்றன. நமது ஜெபங்களைத் தேவன் நிச்சமாகவே கேட்கிறாரா? என்னதான் நடக்கிறது? உன்னதமானவர் உன்னைப் பாழாக்கும் கொள்ளை நோய்க்குத் தப்புவிப்பார் எனும் சங்கீதக்காரனின் கூற்று என்னவானது? (சங் 91:3). இவ்விதக் கேள்விகள் மனதில் மோதாத கிறிஸ்தவர் எவருமில்லை. இவற்றிற்கெல்லாம் பதில் இல்லாது தேவன் நம்மைத் தவிக்கவிடவில்லை என்பதே எனது கருத்து. நல்ல நாட்களிலோ தீய நாட்களிலோ அறிந்துகொள்ளத் தேவையானது அத்தனையும் அவரது எழுதப்பட்ட வார்த்தையாகிய பைபிளில் உண்டு.

## வாசமற்ற உபவாசம் (Flavourless Fasting)

# ஜெபித்தது போதும்!

இன்றையக் காலக்கட்டத்தில் உபவாச ஜெபங்களும் பெருகிவிட்டன. வெளிக்காட்டாது மேற்கொள்ளப்படவேண்டிய இவற்றிற்குத்தான் இன்று விளம்பரம் அதிகம். அதனைக் குறித்து இங்கு அதிகம் பேச விரும்பவில்லை. ஆனாலும், தானதர்மத்தினை உபதேசத்திலும் செயல் பாட்டிலும், போதுமான அளவு வலியுறுத்தாத உபவாச ஜெபங்களை ஆண்டவர் சகித்துக் கொள்ள மாட்டார். உணவையோ நியாயமான அனுபோகங்களையோ அகற்றுவது மட்டும் அவருக்கு பிரியமான உபவாசமாகிவிடாது. மாறாக, "மனுஷன்தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும், தலைவணங்கி நாணலைப்போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக்கொள்ளுகிறதும், எனக்குப் பிரியமான உபவாச நாளாயிருக்குமோ இதையா உபவாசமென்றும் கர்த்தருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுவாய்?அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக்கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்" நமதாண்டவருக்கு வாசமாயிருக்கும் (ஏசாயா 58:5-7). இந்த வசனப்பகுதியை எந்த உபவாச ஜெபத்திலாவது பிரசங்கியார் வியாக்கியானிப்பதைக் கேட்டிருக்கிறீர்களா?இல்லாதோரை ஆசீர்வதிக்கும்படி பங்குபெறுவோரை அனுப்பி வைக்கும் உபவாச ஜெபக்கூடுகை உண்டோ? தேவன் தந்துள்ள இவ்வேழு நிவாரணப்பணியை மேற்கொள்ள உங்களுக்கு விருப்பமில்லையேல் உபவாச ஜெபத்தை நிறுத்திவிடுங்கள் என்னிடம் கோப்படாதீர்கள்! ஏசாயாவை உயிரோடு எழுப்பி அவருடன் வாக்குவாதம் பண்ணுங்கள்! தேவன் சொல்லியுள்ள இவற்றைச் செய்தால் ஏசாயா 57:8ன் படி தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.



## சகோதரி சோதோம்: (Sister Sodom)

ஜெபக்கூடுகைகளில் நாட்டிற்காகவும், உலகிற்காகவும் ஜெபிக்கும் போது அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் வசனம் 2 நாளாகமம் 7:14, "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்." . நகர்கள் மற்றும் பட்டணங்களின் பாவங்கள் மற்றும் தீய வழிகளைக் குறித்துப் பேசும்போது நமக்கு நினைவுக்கு உடனே வருவது சோதோம் நகர்தான். சோதோமின் பாவம் "மிகவும் கொடியது" என்று ஆபிரகாமிடம் தேவன் கூறினார் (ஆதி 18:20). ஆபிரகாம் தொடர்ந்து தேவனிடம் மன்றாடியும் அந்நகரைக் காக்க முடியவில்லை (வசனம் 22-33). அளவுக்கு மீறிய அக்கிரமத்திற்கு சோதோம் நகரையே இயேசுவானவர் எடுத்துக்காட்டாய்க் கூறினார் (லூக் 10:12). அப்போஸ்தலர் பவுல், பேதுரு, யூதா, யோவான் நிருபங்கங்களிலும் அப்படியே குறிப்பிட்டனர் (ரோம 9:29; 2 பேதுரு 2:6, யூதா 7; வெளி 11:8). சோதோமின் பாவம்தான் என்ன? அதற்கான பதிலைத் தருவது எசேக்கியேல் 16:49, "கர்வம், பெருந்தீனிப்பிரியம், சோம்பல் ஆகியவையே உன் சகோதரியாகிய சோதோமின் அக்கிரமம்; ஏழை எளியோரின் கைகளை அவள் வலுப்படுத்தவில்லை" . சக மனிதரின் வறுமையைக் குறித்து கவலைப்படாது சுகபோகமாய் வாழுதல், சோதோமில் பத்து நீதிமான்கள் இருந்தாலும் அதனை அழிப்பதில்லை என்று ஆபிரகாமுக்குத் தேவன் உறுதியளித்தார் (ஆதி 18:32). ஐயகோ, தாராளமாய்க் கொடுப்போரின் எண்ணிக்கை நமது சபைகளில் இவ்வளவு குறைந்து விட்டதோ? நண்பரே, இந்த "பத்துப்பேரில்" நீங்கள் ஒருவராகிவிட வேண்டும் என்ற சவாலை ஏற்பீர்களா?

செய்யக்கூடியவைகளை செய்யாமலிருப்பதும், செய்யக்கூடாததை செய்வதுமே அதிகரித்து வரும் இந்த காலங்களில் ஜெபத்தை நிறுத்துவது எங்களது நோக்கமல்ல, ஜெபத்திற்கு முன் ஜெபிப்பவர்கள் ஆயத்தப்படவேண்டுமென்பதே எங்கள் நோக்கம். இந்நாட்களில் ஜெபிப்பவர்கள் நம்முடைய ஜெபங்கள், உபவாசங்கள் வாசமற்றதாயிராமலிருப்பதற்கு ஏசாயா 58:5-7 வாசித்து அவைகளில் உள்ள 7 நிவாரணப்பணிகளையும் சரிசெய்து பின்னர் உபவாசித்து ஜெபியுங்கள். பின்பு 2 நாளாகமம் 7:14 வசனத்தின் படி தங்களை தாழ்த்தி பாவங்களை(சோதோமின் பாவம்) விட்டகற்றி ஜெபிக்கும் பொழுது மட்டுமே நம்முடைய ஜெபங்கள் அர்த்தமுள்ளதாயும், ஆண்டவரிடம் சேருகிறதாயும், அவரிடத்திலிருந்து பதில் கொண்டுவருகிறதாயும் இருக்கும். ஜெபித்தது போதும் தொடரில் மொத்தம் நான்கு தலைப்புகள் மட்டுமே பார்த்திருக்கிறோம். மற்ற தலைப்புகளை வருகிற மாதத்தில் தொடர்ந்து வாசித்து பயனடையுங்கள். கர்த்தர் தாமே நமது ஜெபத்தை கேட்டு பதில் கொடுத்து தேசத்தை சுதந்தரிக்க ஜெபவீரர்காய் நம்மை எழுப்புவாராக ஆமென்.


தொடரும்...

# நானும் என் எல்லாமும்

ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஈடுபட வேண்டியது. தனித்தாள்ஆத்துமாதாயம் சுற்றுபுற சுவிசேஷப்பணி தொலைவிட மிஷனெரி ஊழியம் முழுநேர மிஷனெரி மட்டுமே இதனைச் சாதித்துவிட முடியாது.

கிறிஸ்து இல்லாத ஒவ்வொரு இடமும், ஒரு மிஷனெரி பணித்தளம்
கிறிஸ்து உள்ள ஒவ்வொருவரும் ஒரு மிஷனெரி பணியாளன்
இந்த அழைப்பைச் செவ்வனே நிறைவேற்றுவது எப்படி?

வேறு வார்த்தைகளில்
மிஷனெரிக் கிறிஸ்தவனாயிருப்பது எங்ஙனம்?
கீழ்கண்ட காரியங்களில் அவற்றை காணலாம்.



## 1. பிரகாசமுள்ள கண்கள்: (Bright Eyes)

முதலாவது, யோவான் 4:35 கண்களை ஏறெடுத்து பாருங்கள். உடலுக்கடுத்த, பொருளாதார தேவைகளினின்று கண்களை எடுத்து, மக்களது ஆத்தும தேவையைப் பாருங்கள். பார்ப்பதற்கு இணையில்லையெனில் மிஷனெரிக்களங்களுக்கு சென்று வாருங்கள். இரண்டாவது, தேவனிடம் கேளுங்கள். மக்களை மரங்களாயல்ல, மக்களாய் பார்க்க வேண்டும். மூன்றாவது மக்களை மக்களாயல்ல, அழியா ஆன்மாக்களாய் பாருங்கள்.ஒவ்வொரு அவிசுவாசியும் ஒரு வாய்ப்பு: பாதகவாதி – ஒவ்வொரு வாய்ப்பிலும் பிரச்சனையைப் பார்ப்பவர்கள் சாதகவாதி – ஒவ்வொரு பிரச்சனையிலும் வாய்பைப் பார்ப்பவர்கள் தரிசனம் + செயல்பாடு இரண்டும் இணைந்தது தான் மிஷனெரிப்பணியாகும்.



## 2. இரத்தம் கசியும் இதயம்: (Bleeding Heart)

தரிசனம் பிறப்பிப்பது தணியா தாகமாகும். இயேசு கிறிஸ்துவின் தாகம்: மத் 9:36 ல் அவர் (இயேசு) திரளான ஜனங்களைக் கண்டபோது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல தொய்ந்து போனவர்களும், சிதறடிக்கப்பட்டவர்களுமாய் இருந்தபடியால் அவர்கள்மேல் மனதுருகி, என்று பார்க்கிறோம். பவுலின் தாகம்: ரோமர் 9:1ல் எனக்கு மிகுந்த துக்கமும், இடைவிடாத மனவேதனையுமாயிருக்கிறது என்று பார்க்கிறோம்.மோசேயின் தாகம்: யாத் 32:32 ல் என் பெயரை ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிவிடும் என்கிறார். சங்கீதக்காரனின் தாகம்: சங் 119:136ல் உம்முடைய வேதத்தை மனுர் காத்து நடவாதபடியால், என்கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது என்று கூறுகிறார்.



## 3. முடங்கிய முழங்கால்கள்: (Bent Knees)
### மன்றாட்டு (Intercession)

முடங்கிய கால்கள் என்றால் மன்றாட்டு ஆகும். மிஷனெரிப்பணியில் நமது முதல்கடமை ஜெபமேயாகும்.எனவே தான் மத் 9:37,38ல் அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்....தமது அறுப்புக்கு வேலையாட்களைஅனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்கிறார். லீதியாளின் இருதயம் திறக்கப்பட்டது. (அப் 16:14), பணிக்கள ஊழியருக்காக ஜெபிப்போம். அவர்களுக்கு தைரியம் அருளப்படவும், வாசல்கள் திறக்கப்படவும் எல்லாவற்றிலும் நன்றாயிருக்கவும் ஜெபிப்போம். குறிப்பாக பரிசுத்தமிழப்பு, வியாதிகள், மனத்தொய்வு, பிரிவினைகள், ஆபத்துக்கள் நேரிடாதபடி ஜெபிப்போம். தன்னல ஜெபத்திற்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.



## 4. தைரியமான உதடுகள்: (Bold lips)
### தூதறிவிப்பு (Proclamation)

யோவான் 18:37 பிலாத்துவுக்கு முன் இயேசுவின் தைரிய சாட்சியை பார்கலாம். தூதறிவிப்பு என்றால் பிரசங்கம் தான் என்பது பொருளல்ல. நற்செய்தியை பிறரோடு பகிர்வதாகும்.

ஆகாரத்திற்காய் ஜெபித்து விட்டு வேலைக்குப் போவதுபோல், தைரியத்திற்காய் ஜெபித்துவிட்டு வாய் திறந்து பேச வேண்டும்.



## 5. அழகிய பாதங்கள்: (Beautiful feet)
### படையெடுப்பு (Invasion)

எபேசியர் 6: 15ல் ஆயத்தம் என்னும் காலணிகள், ஏசாயா 52:7ல் எவ்வளவு அழகிய பாதங்கள்! என்று பார்க்கிறோம். தேவனுக்கு தேவை Van, Can, Fan அல்ல Man திறந்தவெளிப்பிரசங்கம் (தெரு பிரசங்கம்), கிராமப்புற சந்திப்பு, கைப்பிரதி விநியோகம் மத்தேயு 9:35ல் இயேசு நடந்து திரிந்தார் என்று வாசிக்கிறோம். டேவிட் லிவிங்ஸ்டனும், C.T ஸ்டட்டும் ஆப்பிரிக்க காடுகளுக்குள் நடந்து சென்றனர்.பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள்? ரோமர் 10:13-15 எனவே பிரசங்கிக்கிறவர்கள் தேவை. ஊழியம் செய்ய ஆட்கள் தேவை. உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரை மினெரி. Head-to-foot Missionary.

-Dr. R.Stanley

*Head-to-foot Missionary.*



# PRAYER CALENDAR

"நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்."

- எசேக்கியேல் 22:30







## அழியும் ஆத்துமாக்களுக்காய் அனுதினமும் ஜெபிப்போம்

**ஒவ்வொரு நாளும் ஜெபநாளாய் மாறட்டும்**

**1 ABORTION** – கரு கலைப்பு
கல் இருதயம் கொண்டு செய்யும் கருக்கலைப்பிற்காக ஜெபிப்போம்.

**2 ACCIDENTS** – விபத்துக்கள்
விபத்தில் சிக்கி வாழ்வை இழக்கும் ஆத்துமாக்களுக்காய் ஜெபிப்போம்.

**3 ADULTERY** – விபச்சாரம்
மோகத்தில் மூழ்கி அழியும் விபச்சாரத்திற்காக ஜெபிப்போம்.

**4 ALCOHOL ADDICTION** – மது அடிமை
மதி மயங்கி மதுவிற்கு அடிமையாகி மடியும் ஆத்துமாக்களுக்காக ஜெபிப்போம்.

**5 BROKEN FAMILIES** – உடைந்த குடும்பங்கள்
கசப்புடன் கலைந்து வாழும் குடும்பங்களுக்காய் ஜெபிப்போம்.

**6 CHILD ABUSE** – குழந்தைகளுக்காய்
இச்சைக்கு இரையாகும் குழந்தைகளுக்காக ஜெபிப்போம்.

**7 CHURCH PERSECUTION** – சபை வன்கொடுமைகள்
ஆத்தும தாகத்தினால் தாக்குதல்களை சந்திக்கும் சபைகளுக்காய் ஜெபிப்போம்.

**8 DISASTERS** – இயற்கை சீற்றம்
இயற்கை சீற்றத்தால் உயிரை இழக்கும் ஆத்துமாக்களுக்காய் ஜெபிப்போம்.

**9 SUICIDES** – தற்கொலை
தன் காலத்திற்கு முன் தன் காலத்தை முடித்து கொள்ளும் ஆத்துமாக்களுக்காய் ஜெபிப்போம்.

**10 POVERTY** – வறுமை
வறுமையால் வாழ்வாதாரம் இன்றி வாடும் ஆத்துமாக்களுக்காய் ஜெபிப்போம்.

**11 TERRORISM** – தீவிரவாதம்
வன்முறையால் பிற ஆத்துமாக்களின் வாழ்வை பறிக்கும் செயலுக்காய் ஜெபிப்போம்.

**12 CHILD CARE** – குழந்தைகள் காப்பகங்கள்
அன்பின்றி அன்பிற்காக அலையும் ஆத்துமாவிற்காக ஜெபிப்போம்

**13 OLD AGE HOMES** – முதியோர் காப்பகங்கள்
ஆதரவின்றி அன்றாட வாழ்விற்கு திண்டாடும் ஆத்துமாக்களுக்காய் ஜெபிப்போம்.

**14 SOCIAL MEDIA** – சமூக வலைத்தளங்கள்
பயன் இருக்கும் தளங்களை பாதுகாப்புடன் பயன் படுத்த ஜெபிப்போம்

**15 FARMERS** – விவசாயிகள்
விண்ணையும் மண்ணையும் எதிர்பார்த்து வாழும் விவசாயிகளுக்காக ஜெபிப்போம்.

**16 DAILY WAGERS** – கூலி தொழிலாளர்கள்
அன்றாடம் வாழ்க்கைக்கு திண்டாடும் மக்களுக்காக ஜெபிப்போம்.

**17 DOWRY** – வரதட்சணை
பொன்னிற்காக பெண்ணை கொடுமை செய்யும் முறை மாற ஜெபிப்போம்.

**18 LGBT** – ஓரினச்சேர்க்கை
ஆண்டவர் அருவருக்கும் ஓரினச்சேர்க்கைக்காக ஜெபிப்போம்.

**19 DIVORCE** – விவாகரத்து
விவாகரத்தினால் வாழ்வை சிதைத்துக்கொள்ளும் நிலைக்காக ஜெபிப்போம்.

**20 UNEMPLOYMENT** – வேலையின்மை
விதியென வீதி வீதியாக வேலை தேடுவோருக்காக ஜெபிப்போம்.

**21 YOUTH** – வாலிபர்களுக்காக
வளரும் சந்ததி கர்த்தருக்காக வாழ்வதற்காய் ஜெபிப்போம்.

**22 SECRET CHURCHES** – இரகசிய சபைகள்
இரகசிய இதயத்துடன் இயேசுவை பின்பற்றும் சபைகளுக்காக ஜெபிப்போம்

**23 BRIBE** – ஊழல்
உழைப்பை மறந்து ஊழலில் ஈடுபடும் ஆத்துமாக்களுக்காக ஜெபிப்போம்.

**24 SOLDIERS** – போர் வீரர்கள்
தியாகத்தில் எல்லை இல்லாமல் நாட்டின் எல்லையில் நம்மை காக்கும் போர்வீரர்களுக்காக ஜெபிப்போம்.

**25 GOVERNMENT** – அரசு அதிகாரிகளுக்காக
ஆட்சியில் இருக்கும் அதிகாரிகள் நற்கீர்த்திகளுடன் செயலாற்ற ஜெபிப்போம்.

**26 DOCTORS** – மருத்துவர்கள்
மக்களுக்கு மணிநேரம் கூட பார்க்காமல் உதவும் மருத்துவர்களுக்காய் ஜெபிப்போம்.

**27 TEACHERS** – ஆசிரியர்கள்
துளிர்களுக்கு எதிர்காலத்தை தரும் ஆசிரியர்களுக்காக ஜெபிப்போம்.

**28 MISSIONARIES & MINISTERS** – ஊழியர்களுக்காய்
உலகம் முழுவதும் சுவிசேஷத்தை எடுத்து செல்லும் ஊழியர்களுக்காய் ஜெபிப்போம்.

**29 CASTE** – ஜாதி வேறுபாடு
ஜாதி என்னும் வியாதியால் அன்பை இழக்கும் ஆத்துமாக்களுக்காய் ஜெபிப்போம்.

**30 TRANSGENDER** – திருநங்கைகள்
வாழ்க்கையை வாழ திண்டாடும் திருநங்கைகளுக்காக ஜெபிப்போம்.

"Prayer should be the key of the day and the lock of the night." - George Herbert

- prayer fragrance